விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.



Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 12 சனிக்கிழமை (28.08.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 252

நாட்டில் மேலும்

## 4,591 பேருக்கு கோவிட் தொற்று

(கொழும்பு)
நாட்டில் மேலும் 4,591 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளதாக இரா ணுவத் தளபதி 15

## 214 பலி

(கொழும்பு)
நாட்டில் கோவிட் தொற்றால் மேலும் 214 பேர் உயிரிழந்துள்ள னர்.
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அர சாங்கத் தகவல் திணைக்களம் 15


## சீனி விலையை குறைக்க முடியாது

இறக்குமதியாளர்கள் சங்கம்

(கொழும்பு)
சீனி விலையை குறைக்க முடியாது என இறக்குமதியாளர்கள் சங் கம் தெரிவித்துள்ளது.
நாட்டில் தற்போது இர ண்டு அல்லது மூன்று வாரங் 15

செப்ரெம்பர் 6ஆம் திகதிவரை

# பொது முடக்கம் நீடிக்கப்பட்டது



## ஜனாதிபதி கோட்டா அறிவிப்பு

*(கொழும்பு) கொரோனா வைரஸின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் நாட்டில் அமுல்படுத்தப்பட் டுள்ள பொது முடக்கம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதி அதிகாலை 4 மணிவரை நீடிக்கப் பட்டுள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.* *(15ஆம் பக்கம் பார்க்க)*

யாழில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான

## 2ஆம் கட்ட தடுப்பூசி திங்கள் முதல் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டத்தில் 30 வய துக்கு மேற்பட்டோருக்கான 2 ஆம் கட்டத் தடுப்பூசிகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை (30.08.2021) முதல் வழங் கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது.
இது மூன்றாம் கட்டமாக வழங்கப்படும் சந்தர்ப்பம் ஆகும்.
இதன்படி இரண் டாம் டோஸ் தடுப் 15

நாட்டை முடக்குவதால் மாத்திரம்

## கோவிட் வைரஸ் பரவலை கட்டுப்படுத்த முடியாது

இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி



(கொழும்பு)
மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றா மல் இலங்கையை முடக்குவதால் மாத்திரம் கோவிட் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடி யாது என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே 15

## புதுக்குடியிருப்பில் 29 பேருக்கு கொரோனா

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு சுகாதார வைத் திய அதிகாரிபிரிவில் நேற்று 29 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய் 15

## அத்தியாவசிய சேவைகளுக்கு முடக்க காலத்தில் அனுமதி

இராணுவத் தளபதி சவேந்திர சில்வா



(கொழும்பு)
தற்போது முன்னெடுக்கப்படும் அத்தியா வசிய சேவைகளை செப்ரெம்பர் 6ஆம் 15

வவுனியாவில்

## 222 பேருக்கு கொரோனா

(வவுனியா)
வவுனியாவில் மேலும் 222 பேருக்கு கோவிட் தொற்று ஏற்பட் டுள்ளது என சுகாதாரப் பிரிவினர் தெரிவித் 15

## வைத்திய நிபுணர் விமலகாந்தன் கொரோனாவால் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்.போதனா வைத்திய சாலையின் ஓய்வுபெற்ற மனோ தத்துவ வைத்திய நிபுணர் என்.விமலகாந்தன் (வயது-72) நேற்று கொரோனாத் தொற் றால் மரணமானார்.
யாழ்.போதனாவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் 15

## வவுனியாவில் மயங்கி விழுந்தவர் உயிரிழப்பு

(வவுனியா)
வவுனியா, கற்குளம் பகுதி யில் திடீரென மயங்கி விழுந்த நபர் உயிரிழந்துள்ள தாக சுகாதாரப் பிரிவி 15

## சுன்னாகத்தில் வெங்காய காவலுக்கு சென்ற குடும்பஸ்தர்

வயற் கிணற்றில் சடலமாக மீட்பு

(குப்பிழான்)
யாழ்.சுன்னாகம் மேற்கு பருத்திக்கட்டிப் பகுதியில் வயற் காணியொன்றில் அறுவடை செய்யப்பட்ட வெங்காயத்தைக் காவல் செய்வதற்காக கூலியாளா கச் சென்ற இளம் குடும் பஸ்தர் ஒருவர் நேற்று 15

## பொது முடக்கத்தில் எதிர்பார்த்தளவில் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை

வைத்திய நிபுணர் சங்கம் கவலை

(கொழும்பு)
நாட்டில் அமுலிலுள்ள பொது முடக்கத்தில் சட்டங்கள் எதிர்பார்த் தளவு நடைமுறைப்படுத்தப்பட வில்லை என வைத்திய நிபு ணர்கள் சங்கம் கவலை வெளி யிட்டுள்ளது.
மரணங்கள் மற்றும் நோயா ளர்களின் எண்ணிக்கை தொடர் பில் கருத்திற்கொள்ளும்போது, கொரோனாவினால் அதிக பாதிப்பு ஏற்பட் 15

யாழ்ப்பாணத்தில் 4 பேர் உட்பட

## வடக்கு மாகாணத்தில் 9 பேர் கோவிட்டால் பலி

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டத்தில் 4 பேர் உட்பட வட மாகாணத்தில் 9 பேர் கொரோனாத் தொற்றால் உயிரி ழந்துள்ளனர்.
யாழ்ப்பாணம் 15

# கொரோனா உயிரிழப்புகளுக்கு புகைப்பிடிப்பதும் பிரதான காரணம்

## வைத்தியர் தீபால் பெரேரா

(கொழும்பு)

புகைப்பிடிப்பதும் கொரோனாத் தொற்று நோய் மரணங்களுக்குப் பிரதான காரணியாக அமைந்துள்ளது என கொழும்பு லேடி ரிஜ்வே வைத்தியசாலையின் குழந்தைநல வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"இவ்வாறான கொரோனா மரணங்கள் பல கடந்த வாரம் பதிவாகியுள்ளன. புகைப்பிடிப்பதானது நுரையீரலைப் பாதிக்கின்றது. இவ்வாறானவர்கள் விரைவில் கொரோனாத் தொற்றால் ஏற்படும் நிமோனியா வுக்க உள்ளாகிவிடுகின்றனர்.

புகைப்பிடிப்பவர்களுக்க அருகில் இருப்பவர்களும் புகைப்பிடிபவர்கள் எதிர்கொள்ளும் அதே பாதிப்பை எதிர்கொள்கின்றனர்.

அதேபோன்று புகைப்பிடிப்பவர்களுடன் நெருக்கமாக இருக்கும் குழந்தைகளும் சிகரெட் புகையின் தீமையான விளைவுக்க இலகுவில் உள்ளாகிவிடுகின்றனர்" என்றார். (ம-03)

# கைதாகி விளக்கமறியலில் உள்ள ரிசாட் பதியுதீனின் மாமனாருக்கு கோவிட்

முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிசாட்பதியுதீனின் மனைவியின் தந்தைக்கு கொரோனாத்தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் அமைச்சர் ரிசாட் பதியுதீனின் வீட்டில் பணிப்பெண்ணாக கடமையாற்றிய சந்தர்ப்பத்தில் தீக் காயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்த சிறுமி ஹிஷாலினியின் மரணம் தொடர்பில் கைது செய்யப்பட்டு தற்போது இவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், ரிசாட் பதியுதீனின் மனைவியின் தந்தைக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக கொழும்பு நீதவான் நீதிமன்றில் நேற்று தெரியவந்துள்ளது.

ரிசாட் பதியுதீனின் மாமனாருக்கு கோவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையினால், அவரை பிணையில் விடுவிக்குமாறு, மனுவொன்றின் ஊடாக, அவரது சட்டத்தரணிகள் கொழும்பு மேலதிக நீதவான் லோசிணி அபேவிக்ரமவிடம் நேற்று கோரியிருந்தனர்.

எனினும், கொரோனாவைக் காரணம் காட்டி, சந்தேகநபரை பிணையில் விடுவிக்க முடியாது என கூறிய நீதவான், சந்தேக நபருக்கு சிகிச்சைகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு சிறைச்சாலை திணைக்களத்திற்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்த நிலையில், ரிசாட் பதியுதீனின் மாமனாரின் பிணை மனு கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது. (ம-03)

# தேசிய ஜனநாயக ஆசிரிய சங்கத்தினர் கல்வி அமைச்சருடன் கலந்துரையாடல்

(கொழும்பு)

கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவுக்கும்தேசிய ஜனநாயக ஆசிரிய சங்கத்தினருக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கல்வி அமைச்சில் நேற்று இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றதாக அந்தச் சங்கத்தின் பொது செயலாளர் எஸ்.பாலசேகரம் தெரிவித்துள்ளார்.

தரம் 5 புலமைப்பரிசில் மற்றும்கல்விபொதுத்தராதரஉயர்தரப் பரீட்சைகளுக்கு தோற்றவுள்ள மாணவர்களைக் கருத்திற்கொண்டு மிக விரைவில் உரிய தீர்வை முன்வைக்குமாறு அந்த சங்கத்தினர் கோரியுள்ளனர்.

இதேவேளை, ஆசிரியர்களும் பல்வேறு அழுத்தங்களுக்கும் உள்ளாகியிருப்பதாக இதன் போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமது பயிற்சியை நிறைவு செய்துள்ள ஆசிரிய உதவியாளர்களுக்கான நிரந்தர நியமனம் இதுவரையில் வழங்கப்படவில்லை எனவும் தேசிய ஜனநாயக ஆசிரிய சங்கத்தினர் இதன் போது சுட்டிக்காட்டியுள்ளனர். (ம-03)

# யாழ். போதனா பரிசோதனையில் வடக்கில் 96 பேருக்கு தொற்று

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 40 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் நேற்றைய தினம் 96 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று (ஓகஸ்ட்-27) 577 பேருக்க மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் இவ்வாறு 96 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 40பேர்,யாழ்.மாவட்டத்தில் 38 பேர், வவுனியா மாவட்டத்தில் 09 பேர், கிளிநொச்சி மாவட்டத்தில் 06 பேர், மன்னார் மாவட்டத்தில் ஒருவர் (மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில்), இரணைமடு கடற்படை முகாமில் 02 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-03)

# சிரேஷ்ட சட்டத்தரணி சிவநேசன் காலமானார்

(யாழ்ப்பாணம்)

சிரேஷ் சட்டத்தரணியும் மிகச் சிறந்த பேச்சாளருமான சின்னத்துரை சிவநேசன் (வயது -77) நேற்றுக் காலமானார்.

சட்டத்துறையில் 45 ஆண்டுகளுக்க மேல் பணியாற்றிய சிரேஷ்ட சட்டத்தரணி சிவநேசன் மிகச் சிறந்த பேச்சாளராகவும் பட்டிமண்டப நடுவராகவும் விளங்கியவர்.

அகில இலங்கை அழுதசுரபி கலாமன்றத்தின் போசகராக இருந்து அரும்பாடுபட்டவர்.

அவரின் மறைவு குறித்து சிரேஷ்ட சட்டவல்லுநர் ந.ஸ்ரீகாந்தா உள்ளிட்ட பலரும் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளனர்.



அன்னாரின் இறுதிச் சடங்கு அவரின் சொந்த ஊரான புத்தூரில் நேற்று இடம்பெற்றது. (ம-03)


## நினைவஞ்சலி



கடந்த 31.07.2021 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த
எமது குடும்பத் தலைவி
அமரர் ரஞ்சிதம் கிருஷ்ணசுந்தரம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (28.08.2021)
சனிக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித
தீர்த்தக்கரையில் நடைபெறும்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நாவலடி வீதி, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
077 624 9436
மகன், பெற்றோர், சகோதரிகள்,
ஜேர்மன்வாழ் சகோதரர்.



## கண்ணீர் காணிக்கை



எமது கல்லூரியின் பழைய மாணவியும்
இக் கல்லூரியில்
1977ஆம் ஆண்டிலிருந்து ஆசிரியையாகவும்
1989ஆம் ஆண்டிலிருந்து உப அதிபராகவும்
1990 - 2005 வரை அதிபராகவும்
கடமையாற்றி ஓய்வுபெற்ற பின்னரும்
எமது கல்லூரி வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன்
செயலாற்றிய
அமரர் செல்வி
பாக்கியலட்சுமி மார்க்கண்டு
அவர்களின் பிரிவுத் துயரில் பங்குகொள்வதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மண்ணில் - 25.03.1945
விண்ணில் - 26.08.2021

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி

# பயணக் கட்டுப்பாட்டு காலத்தை நீடியுங்கள்- உபுல் ரோஹண

(கொழும்பு)

**உரிய பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின், குறைந்தபட்சம் 14 நாட்கள் பயணக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும் என இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அறிவித்துள்ளது.**



தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள பயணக்கட்டுப்பாட்டு காலமானது போதுமானதாக இல்லை என சங்கத்தின் தலைவர், உபுல் ரோஹண குறிப்பிட்டார்.

நாட்டில் தொடர்ச்சியாக அதிகமான கொரோனா நோயாளர்கள் பதிவாவதுடன், இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும்.

உரியவாறு பயணக்கட்டுப்பாடு அமுல்படுத்தப்பட்டால், எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடுப்பகுதியில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படலாம் என உபுல் ரோஹண தெரிவித்தார். தற்போது பயணக் கட்டுப்பாடு அமுல்படுத்தப்பட்டுள்ள போதிலும், வீதிகளில் அதிகளவான வாகனங்கள் பயணிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (நி-5)

## வீடு திரும்பினார் அஜித் ரோஹண



(கொழும்பு)

கொரோனா தொற்றுக்குள்ளாகி, கொழும்பு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த முன்னாள் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பொலிஸ் குற்றவியல் மற்றும் போக்குவரத்து விடயங்களுக்கான பிரதானியுமான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண நேற்று வீடு திரும்பினார். (நி-5)

## கட்டுப்பாடின்றி எகிறும் சீனி விலை இறக்குமதி நிறுத்தமே இதற்குக் காரணம்

### நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை

(கொழும்பு)

நாட்டில் சீனியின் விலை கட்டுப்பாடின்றி நாளுக்கு நாள் உயர்வடைந்து செல்கின்றது. இதற்கமைய தற்போது சந்தையில் ஒரு கிலோ கிராம் சீனியின் சில்லறை விலை 210 ரூபாவுக்கு மேல் அதிகரித்துள்ளது.

சில வாரங்களுக்கு முன்னர் 115 ரூபா முதல் 130 ரூபா வரையான விலைகளில் விற்பனையான சீனி கிலோ கிராம் ஒன்றின் விலை தற்போது 210 ரூபா முதல் 220 ரூபா வரையில் விற்பனையாகின்றது என நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

105 ரூபாவுக்கு விற்பனை செய்யக்கூடிய சீனியே தற்போது 200 ரூபாவுக்கும் மேலான விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றது என நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், சீனி இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ள காரணத்தினாலேயே நாட்டில் அதன் விலைகள் அதிகரிக்கக் காரணமாக அமைந்துள்ளது என நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

அத்தியாவசியப் பொருட்களின் பட்டியலில் இருந்து சீனி நீக்கப்பட்டுள்ளது எனவும், இதனாலேயே அதன் விலை கட்டுப்பாடு இன்றி உயர்வடைந்து செல்கின்றது எனவும் எதிர்க்கட்சிகள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும் இதற்குக் கட்டுப்பாட்டு விலையை அறிவித்து விலையைக் கட்டுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினர் கூறியுள்ளனர்.

இலங்கை மக்கள் வருடாந்தம் சுமார் 500 மெட்ரிக் டொன் சீனியை பயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்கின்றனர்.

அதனை ஈடுசெய்ய 100 மெற்றிக் டொன் சீனி நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதுடன், எஞ்சிய தொகை வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதிசெய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## பரீட்சைகளுக்கான விண்ணப்ப திகதி நீடிப்பு

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர் தரம் மற்றும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை ஆகிய வற்றுக்கு இதுவரை விண்ணப்பிக்காத மாணவர்களுக்காக இரண்டு வாரங்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதி வரை பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இதேவேளை, ஏற்கனவே திட்டமிட்டவாறு உயர் தரம் மற்றும் 5 ஆம் தர புலமைப்பரில் பரீட்சையினை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகளுக்கான தினங்களில் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமாயின், எதிர்வரும் சில வாரங்களுக்குள் அதற்கான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் என கல்வி அமைச்சர் தெரிவித்தார். (நி-5)


மணிவிழா வாழ்த்து



திரு. சின்னத்தம்பு தர்மராசா
(உதவிக் கல்விப் பணிப்பாளர்- முறைசாராக் கல்வி)

சேவை விபரம்
16.04.1966-களு/ அல்குமைசரா மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை)
01.03.1988 பலாலி ஆசிரியர் கலாசாலை
01.01.1990-களு/ குரோடன் தமிழ் வித்தியாலயம்
01.01.1991-யா/[illegible] ஸ்ரீகணேச வித்தியாலயம்
யா/ [illegible] அ.த.க. பாடசாலை
01.03.1997 யா/ மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்
யா/ மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்
01.09.2002- யா/ மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்
02.06.2010- தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகம்

17 வருடங்கள் ஆசிரியராகவும் 9 வருடங்கள் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் அர்ப்பணிப்புடன் கடமையாற்றி தென்மராட்சி மாணவர்களின் கல்வியை வளப்படுத்தி 28.08.2021 இன்று மணிவிழாக்காணும் உதவிக் கல்விப் பணிப்பாளரின் ஓய்வுக்காலம் சிறப்புற இறைவனை வேண்டி வாழ்த்துகிறோம்.

(7814)

வாழ்த்துவோர்:
நலன்புரிச்சங்கம், வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி



சேவை நயப்பும் மணிவிழா வாழ்த்தும்

திரு. சின்னத்தம்பு தர்மராசா
(உதவிக் கல்விப் பணிப்பாளர்-
முறைசாராக் கல்வி
தென்மராட்சி கல்வி வலயம்)



01.09.2002- 01.06.2010 வரை யா/ மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றி தென்மராட்சி கல்வி வலயத்தின் முறைசாராக் கல்விப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றுச் சிறப்பாகச் சேவையாற்றி ஓய்வு பெற்றிருக்கும் (27.08.2021) திரு. சி.தர்மராசா அவர்களுக்கு அறுபதாவது பிறந்த தின வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு அவரது ஓய்வுக்காலம் சிறக்க எல்லாம் வல்ல வேம்படி விநாயகனின் அருள்வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

(7815)

யா/ மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்.
முன்னாள் அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்

# கரீபியன் பிறீமியர் லீக்; ஆரம்ப போட்டிகளில் கயானா, சென்.கிட்ஸ் அணிகள் வெற்றி



கரீபியன் பிறீமியர் லீக் இருபது -20 தொடரின் ஆரம்ப போட்டிகளில் கயானா அமசோன் அணி மற்றும் சென்.கிட்ஸ் நெவிஸ் பெட்ரி யோட்ஸ் அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

நடப்பு தொடரின் முதல் லீக் போட்டியில், கயானா அமசோன் அணியும் ட்ரின்பகோ நைட் ரைடர்ஸ் அணியும் மோதின.

சென்.கிட்ஸ் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ட்ரின்பகோ நைட்ரை டர்ஸ் அணி முதலில் களத்த டுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கயானா அமசோன் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில், 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 142 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து 143 என்ற வெற்றிஇலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய ட்ரின்பகோ நைட்ரைடர்ஸ் அணியால், நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 133 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் கயானா அமசோன் அணி 9 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

தொடரின் இரண்டாவது லீக் போட்டியில், பார்படோஸ் றோயல்ஸ் அணியும் சென்.கிட்ஸ்-நெவிஸ் பெட்ரியோட்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

சென்.கிட்ஸ் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பார்படோஸ் றோயல்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.கிட்ஸ்-நெவிஸ் பெட்ரியோட்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 175 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதனைத்தொடர்ந்து 176 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பார்படோஸ் றோயல்ஸ் அணியால், நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 154 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் சென்.கிட்ஸ்- நெவிஸ் பெட்ரியோட்ஸ் அணி 21 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. (4-6)

# எவரெஸ்ட் பிறிமியர் லீக்; மேலும் ஒரு இலங்கை வீரர்




இலங்கைக் கிரிக்கெட் வீரரான சீக்குகே பிரசன்னா நேபாளத்தில் நடைபெறவுள்ள எவரெஸ்ட் பிறிமியர் லீக் இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடரில் விளையாட ஒப்பந்தமாகியுள்ளார்.

இதன் மூலம் ஒப்பந்தம் செய்யப்பட்ட தினேஷ் சந்திமல் பைரவா கிளேடியேட்டர்ஸ் அணிக்காகவும் சீக்குகே பிரசன்ன சித்வான் டைகர்ஸ் அணிக்காகவும் விளையாடவுள்ளார்.

4வது அத்தியாயமாக நடைபெறும் எவரெஸ்ட் தொடரில் நடப்பு சம்பியனாக லலித்பூர் பெட்ரியொட்ஸ், பைரவா கிளேடி யேட்டர்ஸ் ,பிரட் நகர் வோரியஸ் , சித்வான் டைகர்ஸ், கத்மண்டு கிங்ஸ்லெவன் , பொகுறா ரைனோஸ் ஆகிய 6 அணிகள் பங்கேற்கும் இத்தொடர் செப்டம்பர் மாதம் 25 ஆம் திகதி அன்று ஆரம்பமாகவுள்ளது. (4-6)

# சிக்ஸர் அடித்த பின் பந்தை தேடிய டோனி



எம்.எஸ். டோனி துபாயில் உள்ள ஐ.சி.சி. அகாடமியில் சி.எஸ் கேவின் பயிற்சிஅமர்வின் போது முன்னெப்போதும் இல்லாத வகையில் செயற்பாட்டில் ஈடுபட்டார்.நெட் பயிற்சி அமர்வின் போது பலமான சிக்ஸர் ஒன்றை அடித்தபிறகு எம். எஸ் டோனி புதருக்குள் பந்தைத் தேட வேண்டியிருந்ததால் இந்த சம்பவம் கிரிக்கெட் ரசிகர்களை சிரிக்க வைத்தது. CSK தனது அதிகார பூர்வ சமூக ஊடக கணக்கில் ஒன்றரை நிமிட வீடியோவை வெளியிட்டது. (4-6)



# ஜோ ரூட் சதம்

# வலுவான நிலையில் இங்கிலாந்து



இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டியின், இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்த வந்துள்ளது.

இதன்படி தற்போது முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிவரும் இங்கிலாந்து அணி, நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 423 ஓட்டங்களை பெற்றது.

ஆட்டநேர முடிவில் கிரைஜ் ஓவர்டொன் 24 ஓட்டங்களுடனும் ஓல்லி ரொபின்சன் ஓட்டமெதுவும் பெறாத நிலையிலும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் முதல் இன்னிங்ஸ் ஓட்டங்களுடன் ஒப்பிடுகையில், இங்கிலாந்து அணி 345 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது.



லீட்ஸ் மைதானத்தில் கடந்த புதன்கிழமை ஆரம்பமான இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியக் கிரிக்கெட் அணி, 78 ஓட்டங்களுக்த சுருண்டது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ரோஹித் சர்மா 19 ஓட்டங்களையும் ரஹானே 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இங்கிலாந்து அணியின் பந்துவீச்சில், ஜேம்ஸ் எண்டர்சன் மற்றும் கிரைஜ் ஓவர்டொன் ஆகியோர் 3 விக்கெட்டுகளையும் ரொபின்சன் மற்றும் சேம் சுர்ரன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி, நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்த 423 ஓட்டங்களை பெற்றது.

இங்கிலாந்து அணிசார்பில், அதிகப்பட்ச ஓட்டங்களாக, ஜோ ரூட் 121 ஓட்டங்களையும்டாவிட் மாலன் 70 ஓட்டங்களையும் ஹசீப் ஹமட் 68 ஓட்டங்களையும் ரொறி பர்ன்ஸ் 61 ஓட்டங்களையும்பெற்றுக்கொண்டனர்.இந்தியக்கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், மொஹமட் ஷமி 3 விக்கெட்டுகளையும் மொஹமட் சிராஜ் மற்றும் ரவிந்தீர ஜடேஜா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் ஜஸ்பிரிட் பும்ரா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இன்னமும் 2 விக்கெட்டுகள் கைவசமுள்ள நிலையில், போட்டியின் இரண்டாம் நாள் முடிவுற்றது. (4-6)

# இராசிபலன்

28.08.2021
ஆவணி 12, சனிக்கிழமை
சஷ்டி முன்னிரவு 9.55 மணிவரை
பரணி பின்னிரவு 5.13 மணிவரை
சுபநேரம் 3.05- 4.32 மணிவரை
இராகுகாலம் 9.05-10.35 மணிவரை
சந்திராஷ்டமம்-சித்திரை வளவன்

**மேஷம்** — திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள்.

**ரிஷபம்** — சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் குறை கேட்கும் நிலை ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும் நாள்.

**மிதுனம்** — வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**கடகம்** — கண்ணியமிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், செய்தொழிலில் ஆர்வம் கூடும், உற்சாகமான நாள்.

**சிம்மம்** — மறதியால் விட்ட காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், சாமர்த்தியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், ரோக பயமுண்டு.

**கன்னி** — கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், மற்றவர்களை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.

**துலாம்** — பிற இனத்தவரால் பெருமை சேரும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்** — பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், உறவினர் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**தனுசு** — புத்திசாதுரியமான செயற்பாடுகளால் பொருள் வரவைப் பெருக்கிக் கொள்வீர்கள், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**மகரம்** — இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைக் கூறலாம், புதிய பொருட்களை வாங்க முற்படுவீர்கள்.

**கும்பம்** — பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், வீண்பிடிவாதம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது, பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மீனம்** — வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

உன் கட்டுப்பாட்டுக்குள் அடங்காத எதுவும் உனக்குள் இல்லை

# நாட்டை முடக்குவதன் மூலம் அரசை வீட்டிற்கு அனுப்பவே முயற்சி

## அபேகுணவர்த்தன சாடல்



(கொழும்பு)

அரசாங்கத்தை சுலபமாக வீழ்த்தும் சூழ்ச்சியாகவே நாட்டைத் தொடர்ச்சியாக முடக்குமாறு எதிர்க்கட்சியினர் கோருகின்றனர் என்று அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது, நாட்டை தொடர்ச்சியாக மூடி வைக்குமாறு எதிர்க்கட்சி அழுத்தம் கொடுப்பதன் நோக்கம் அதன் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தை வீழ்ச்சி அடையச் செய்து ஆட்சியை பிடிப்பதற்கேயாகும்.

இப்போது நாடு முழுமையாக மூடப்பட்டுள்ள நிலையில் பாதியே மூடியுள்ளதாக எதிர்க்கட்சி குற்றம் சுமத்துகிறது. கைத்தொழில்பேட்டைகளை மூடியதும், ஏற்றுமதி தடை செய்யப்பட்டதும் நாட்டுக்கு வரும் வெளிநாட்டு செலாவணி இல்லாது போகும், டொலர் இல்லாது போன பின் எரிபொருள் மற்றும் அத்தியாவசிய பொருட்களை இறக்குமதிசெய்ய முடியாது போகும்.

அப்படி ஒரு நிலைமை உருவான பின் இந்த அரசாங்கத்திற்கு முடியாது வீட்டுக்கு அனுப்புவோம் என்று கோஷம் எழுப்பிக் கொண்டு வீதிக்கு இறங்குவார்கள் என அமைச்சர் தெரிவித்தார். (நி-5)

# 458 கிலோ உலர்ந்த மஞ்சள் கற்பிட்டியில் மீட்பு

(புத்தளம்)

கற்பிட்டி இப்பந்திவு பகுதியில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக கூறப்படும் 458 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

எனினும், இந்த சுற்றிவளைப்பின் போது எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

நேற்று வெள்ளிக்கிழமை மேற்கொண்ட விஷேட தேடுதல் நடவடிக்கையின் போதே குறித்த உலர்ந்த மஞ்சள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் குழிஒன்றுக்குள் மிகவும் சூட்சுமமான முறையில் 21 உர மூடைகளில் பொதி செய்யப்பட்ட 458 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாக கடற்படையினர் தெரிவித்தனர் (நி-5)

# தொழிலுக்காக வெளிநாடு செல்வோர் தடுப்பூசிக்கு விரைவாக பதிவு செய்யுங்கள்

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு தொழிலுக்காக செல்லவுள்ளோர் விரைவாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் தங்களை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி ஏற்றப்படும் என அதன் பொது முகாமையாளர் மங்கள ரன்தெனிய தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் காணப்படும் தடுப்பூசிக்கான விண்ணப்பத்தை பூர்த்திசெய்து பதிவேற்றுமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

வெளிநாடுகளுக்கு தொழிலுக்காக அனுப்பப்படுவோருக்கு கட்டாயம் தடுப்பூசி ஏற்றப்பட்டிருக்க வேண்டும் என்ற அறிவித்தலுக்கு அமைய, இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறிப்பிட்ட தடுப்பூசியை மாத்திரமே பணியாளர்கள் ஏற்றியிருக்க வேண்டும் என எந்தவொரு நாடும் இதுவரை அறிவிக்கவில்லை என வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

அதற்கமைய, பைசர், அஸ்ட்ராஜெனேகா, சினோபார்ம் ஆகிய தடுப்பூசிகளை வெளி நாடுகள் அங்கீகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (நி-5)

# சீனி மற்றும் பால்மா கொள்வனவிற்கு முண்டியடிக்கும் மக்கள்

(மட்டக்களப்பு)

நாட்டில் பால்மா, சீனி, எரிவாயு உட்பட பல்வேறு அத்தியாவசிய பொருட்களின் விலை உச்சத்தை தொட்டும், சில அத்தியாவசிய பொருட் கள் சந்தையில் இல்லாத நிலையில் லங்கா சதொசவில் சீனி விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இலங்கை உற்பத்தி பால்மா உட்பட சிலவகை பால்மா விற்பனையும், சீனியும் விற்பனை இடம் பெற்றதால் மக்கள் அதிகளவில் லங்கா சதொசவில் குவிந்திருந்தமையை காணக்கூடியதாக உள்ளது.

அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி, வாழைச்சேனை, வாகரை, கல்குடா உட்பட பல்வேறு பிரதேசங்களில் சீனிக்குத் தட்டுப்பாடு நிலவிவரும் நிலையில் வாழைச்சேனை மாவடிச்சேனை சதொச விற்பனை நிலையத்தில் நுகர்வோரின் நலன் கருதி ஒருவருக்கு ஒரு கிலோ எனும் நிபந்தனைக்கமைய சீனி விற்பனை செய்யப்படுகிறது.

அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்ய மக்கள் ஆர்வத்துடன் விற்பனை நிலையத்தை நோக்கி வந்தாலும் நாட்டின் கொரோனா சூழ்நிலை காரணமாக மக்களை கட்டுப்படுத்துவதில் பல்வேறு சிக்கல் நிலைகள் உள்ளதை அவதானிக்க முடிகின்றது.

நாட்டின் நடுத்தர வர்க்கம் முதல் உயர்தர வர்க்கம் வரை கொரோனா அலையில் பொருளாதார பாதிப்பை சந்தித்திருக்கும் இந்த சூழ்நிலையில் விலையேற்றம் பாரிய சங்கடத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளதுடன், வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்கள் பலதும் பசியுடன் நாட்களை கடத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. (நி-5)

# மீள்குடியமராத குடும்பங்களின் விபரங்கள் பெற்றுக் கொள்ளல்

(யாழ்ப்பாணம்)

முப்படைகள் மற்றும் பொலிஸாரின் தனியார் காணிகளின் பாவனை காரணமாக இதுவரை மீளக் குடியமராத குடும்பங்கள் மாவட்ட செயலகத்தில் அதற்குரிய விண்ணப்ப படிவத்தை பெற்று தங்களின் விபரங்களை பூர்த்தி செய்து காணி உறுதியின் பிரதிகளுடன் தாங்கள் தற்போது வசிக்கும் கிராம சேவையாளரின் உறுதிப் படத்தலோடு தற்போது வசிக்கும் பிரதேச செயலகத்தில் கையளிக்கவும்.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு வெளியே வசிப்பவராயின்,

குறிப்பிட்ட தகவல் படிவத்தை பூரணப்படுத்தி காணியின் உறுதிகளின் பிரதிகளையும் மாவட்ட செயலாளர், மீள்குடியேற்றப் பிரிவு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும் அல்லது தகவல் படிவத்தினையும் மற்றும் உறுதி ஆவணங்களின் பிரதிகளினையும் scan செய்து jftriforcesland@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். மாவட்ட அரச அதிபர் அறிவித்துள்ளார்.

மேலதிக விபரங்களுக்கு www.jaffna.dist.gov.lk எனும் இணையத்தை பார்வையிட முடியும். (4-5)

# தனிமைப்படுத்தப்பட்டவர்கள் பொது வெளியில் நடமாட்டம்

## மக்கள் குற்றச்சாட்டு

(சாவகச்சேரி)

தென்மராட்சி-எழுதுமட்டுவாள் பிரதேசத்தில் தனிமைப்படுத்தப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் சுகாதார விதிமுறைகளை மீறி வீதிகளில் உலாவித் திரிவதாக ஊர் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கொரோனா தொற்றாளர்களுடன் தொடர்புபட்டவர்கள் என சுகாதாரப் பகுதியினரால் அவரவர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களே இவ்வாறு பொறுப்பின்றி ஊரடங்கு வேளையிலும் நடமாடித் திரிவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

தனிமைப்படுத்தப்பட்ட வீடுகளைச் சேர்ந்தோர் வீதிகளில் நடமாடுவதால் அப்பகுதிமக்கள் அச்சமடைந்திருப்பதுடன், இது தொடர்பாக உரிய தரப்பினர் கவனத்திற்கு கொண்டுசெல்ல இருப்பதாகவும் மேலும் அவர்கள் தெரிவித்தனர். (4-5-30)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமானதொரு வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் வண் வடமேற்கு ஸ்ரீவீரமா பிடாரி அம்பாள் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவ ஸ்ரீ சொ.இ. விக்கினேஸ்வரக் குருக்களின் அருளாசி உரையும் வேத பாராயண நிகழ்வும் இடம் பெறவுள்ளன.

இந் நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது. (6-7)




ஜனாதிபதியின் கொரோனா நிவாரண நிதியத்திற்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஒருகோடி ரூபாவினைத் தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகரும், பிரபல தொழிலதிபருமான வா.தியாகேந்திரன் வழங்கியுள்ளார்.யாழ்.பலாலி இராணுவ தலைமையகத்தில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.
(படம்- ரவிசாந்)

# முந்து தமிழ் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கம்பன் கழகமும், அவுஸ்திரேலியக் கம்பன் கழகமும் இணைந்து நடத்தும் "முந்துதமிழ் " எனும் மாதாந்த இயலரங்கின் ஆகஸ்ட் மாத நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இணைய வழியில் இடம்பெறவுள்ளது.

குறித்த நிகழ்வினை AKILA ILANKAI KAMBAN KAZHAGAM, KAMBAN KAZHAGAM AUSTRALIA ஆகிய யூடியுப் முகவரிகளிலும், KAMBAVARITHI ILANKAI JEYARAJ,KAMBAN KAZHAGAM AUSTRALIA ஆகிய பேஸ்புக் முகவரிகளுடாகவும் நேரலையாகக் கண்டு களிக்க முடியும். (4-5-30)




## நீ எமை வந்து காத்தருள்வாயே

நல்லைப் பதி வாழ் நல்லூர்க் கந்தா
நாம் உனைப் பணிந்து வணங்குகின்றோமே
நின் பாதமே எமக்கு தஞ்சமே வேலா
நீ எமை வந்து காத்திடு வாயே
துண்ணிய அறிவினைத் தந்தருள்வாயே
நூலிடை உமையாள் பால குமாரா
நெற்றிக் கண்ணில் உதித்த செவ்வேளே
நேரில் வந்து வரம் தந்தருள்வாய்
நொந்த மனதுக்கு ஆறுதல் தருவாய்
நோய் நொடியின்றி வாழ வைப்பாயே
முருகனே செந்திற்க் குமரனே போற்றி
போற்றி போற்றி போற்றி!

சி.மகாலட்சுமி
கொக்குவில்

## தேரோடும் வீதியிலே கந்தா நின் காட்சி என்றோ.....

தேரோடும் வீதியிலே கந்தா நின் காட்சி
கண்டோம் காலமெலாம்-இன்றோ
நான்கு சட்டம் நடுவினிலே நல்லைக்குமரா
நின் தரிசனம் கண்டோம் அப்பா...
உன் வீதியிலே உலாவரும் உன் அழகை
உளம் நொந்து வணங்குகின்றோம் ஐயா...
விதியை நொந்து வேதனையை சுமக்கின்றோம்
வேலவனே! மாலவனே! வினை தீர்க்கும் தூயவனே!
மயில் வாகனனே! வள்ளி மணவாளா! வடிவேலா!
அல்லல் குறை தீர்க்கும் ஆறு திருமுருகா!
எமைக் காத்தருள்வாய்! எம்குறை தீர்த்திடப்பா..
பொல்லாத கொரோனாவை கொன்றொழித்திடப்பா
நல்லூர் கந்தா!

திருமதி.கி.சரவணபவன்

## நல்லூரில் வேலவன்

ஆறுபடை வீடுகொண்டு அவனியைக் காத்திடவே
வெவ்வேறு திருக் கோலம் கொண்டவா- அவன்
மாறுபட்ட கோலத்திலே நல்லூரில் அமர்ந்து கொண்டு
வேலவனாய் என்றும் காட்சி தருவானே

சி. சிவானந்தராஜா



# டெல்டா திரிபினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாரடைப்பு ஏற்படும் அபாயம்

(கொழும்பு)

**டெல்டா வைரஸ் திரிபினால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு எவ்வித அறிகுறிகளும் வெளிக்காட்டாமல், மாரடைப்பு ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் மார்பு சிகிச்சை பிரிவின் மருத்துவ நிபுணர் கோட்டாபய ரணசிங்க தெரிவித்துள்ளார்.**

இது மிகவும் ஆபத்தான நிலைமையாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கடந்த வாரத்தினுள் இவ்வாறு அடையாளம் காணப்பட்ட 20க்கும் அதிகமானோருக்கு அவசர சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டியிருந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இந்த அபாய நிலை காரணமாக, எவருக்கேனும் மாரடைப்பு ஏற்படுவதற்கான அடிப்படை அறிகுறிகள் வெளிக்காட்டும் பட்சத்தில், அவரை உடனடியாக மருத்துவ சிகிச்சைகளுக்காக மருத்துவமனையில் அனுமதிப்பது சாலச்சிறந்தது என மருத்துவ நிபுணர் கோட்டாபய ரணசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொவிட் முதலாம் மற்றும் இரண்டாம் அலைகளின்போது, இவ்வாறான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை எனத் தெரிவிக்கும் மருத்துவ நிபுணர், மூன்றாவது அலையின்போது தோற்றம் பெற்ற டெல்டா திரிபின் காரணமாக இந்நிலைமை உருவாகியுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறு மாரடைப்புக்கு உள்ளாகி மருத்துவமனையில் அனுமதியாகும் பெரும்பாலானோர் இளம் வயதினர் என்றும், இவர்கள் மாரடைப்புக்கு காரணமாகும் உயர் இரத்த அழுத்தம், கொலஸ்ட்ரோல், நீரிழிவு போன்ற எந்தவொரு நோய்களையும் கொண்டிராதவர்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்

## விரதங்கள்

## நலமும் வளமும் தரும் விநாயகர் சதுர்த்தி



இனி...விநாயகர் அவதாரம் குறித்து புராணத்தில் கூறப்பட்டிருப்பதைப் பார்க்கலாம்.

ஒரு முறை கயிலாயத்தில் பார்வதி தேவி நீராடிக்கொண்டிருந்தார். அப்போது தனக்கென்று ஒரு காவல் தெய்வம் வேண்டும் என்று விரும்பினார். அப்போது குளியலுக்கு பயன்படுத்தும் மஞ்சளை குழைத்து அதில் அழகிய உருவம் செய்து, உயிர் கொடுத்து விநாயகப் பெருமானை தோற்றுவித்தார்.

விநாயகரை வீட்டுவாசலில் இருக்க வைத்து "நான் குளித்து கொண்டு இருக்கும் போது எவரையும் உள்ளே அனுமதிக்கக்கூடாது" என்று கூறிச் சென்றார். அந்த நேரம் பார்த்து வீட்டுக்கு திரும்பி வந்த சிவபெருமானை விநாயகர் வாசலில் தடுத்து நிறுத்தி விட்டார். கோபம்கொண்ட சிவபெருமான் விநாயகரை "யாரோ" என்று நினைத்து அவரது தலையை துண்டித்து விட்டார்.

இதைப் பார்த்த பார்வதி மிகவும் வருத்தப்பட்டார். அவரைச் சமாதானப்படுத்தும் முயற்சியில் வடக்கு நோக்கி தலைவைத்து தூங்கிக்கொண்டிருக்கும் உயிரினத்தின் தலையை வெட்டி கொண்டு வரும்படி தன் சேவகர்களுக்கு உத்தரவிட்டார்.

அவ்வாறே சேவகர்களும் வடக்கு நோக்கி தலைவைத்து தூங்கிக்கொண்டிருந்த ஒரு யானையின் தலையை வெட்டி சிவனிடம் கொடுத்தனர்.


சிவபெருமான் விநாயகரது உடலுடன் யானைத் தலையை பொருத்தினார். பூத கணங்களுக்கு அவரை தலைவனாக்கி மகிழ்ந்தார். அனைத்து மங்கள நிகழ்ச்சிகளுக்கும் தொடக்கத்தில் தமது மகனை வழிபட வேண்டும் என்று அவர் ஏற்பாடு செய்தார்.

விநாயகர் பல திருவிளையாடல்களை செய்துள்ளார். காக்கை வடிவம் கொண்டு அகத்தியரின் கமண்டலத்தில் இருந்து காவிரிநதியை கவிழ்த்து பெருகி ஓடச்செய்தார். விபீஷணன் இலங்கைக்கு எடுத்துச்சென்ற ரெங்கநாதர் சிலையை தடுக்கும் விதத்தில் பாலகன் வடிவில் வந்து லீலைகள் புரிந்து சிலையை ஸ்ரீரங்கத்தில் பிரதிஷ்டை செய்தார்.

முருகன் வள்ளியை மணம் புரிவதற்கு யானை வடிவில் சென்று உதவி செய்தார். அனலாசுரன், சிந்துரன் ஆகிய அசுரர்களை விநாயகர் விஸ்வரூபம் எடுத்து அழித்தார். வியாசர் சொல்லச்சொல்ல மகாபாரதத்தை எழுதினார்.

(தொடரும்)

# சீனத்தூதுவர்- சபாநாயகர் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான சீனத்தூதுவர் ஷீ சென்ஹொங் மரியாதையின் நிமித்தம் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவை நேற்று முன் தினம் காலை சந்தித்தார்.

தற்போதைய கொவிட்-19 சூழலைக் கட்டுப்படுத்துவதற்கு இரு நாடுகளும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவரும் நேரத்தில், கொவிட்-19 ஐ கட்டுப்படுத்த இலங்கை அரசாங்கத்துக்கு முழுமையான ஒத்துழைப்பை சீன அரசாங்கம் தொடர்ந்தும் வழங்கும் என்று சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற சந்திப்பில் சீனத் தூதுவர் தெரிவித்தார்.

அத்துடன், இரு நாடுகளுக்குமிடையில் பொருளாதார, நிதி ஒத்துழைப்பு மற்றும் பாராளுமன்ற நட்புறவை பலப்படுத்துவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. இலங்கையின் நீண்டகால நட்பு நாடு என்ற ரீதியில் சீன அரசாங்கம் தொடர்ச்சியாக வழங்கிவரும் ஒத்துழைப்புகளுக்கு சபாநாயகர் தனது நன்றியைத் தெரிவித்தார். (நி-5)

# இலங்கை- மாலைதீவு விமானசேவை அடுத்தமாதம்

(கொழும்பு)

இலங்கை மற்றும் மாலைதீவுக்கு இடையிலான விமான சேவையை அடுத்த மாதம் முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என எமிரேட்ஸ் விமான சேவை அறிவித்துள்ளது.

கொழும்பு முதல் மாலை தீவுக்கு இடையே செப்டெம்பர் முதலாம் திகதியிலிருந்து நாளாந்தம் இந்த விமான சேவை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் டுபாய் மற்றும் மாலைதீவுக்கு இடையிலும், கொழும்பிலிருந்து டுபாய் ஊடாக மாலைதீவு வரையும் குறித்த விமானம் பயணிக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விமான பயணங்களுக்காக போயிங் 777 வகையான விமானங்கள் பயன்படுத்தப்பட உள்ளதாகவும் எமிரேட்ஸ் விமான சேவை அறிவித்துள்ளது. (நி-5)

# மேலும் 2 மில். தடுப்பூசிகள்

## சீனத் தூதரகம் அறிவிப்பு

(கொழும்பு)

மேலும் 2 மில்லியன் டோஸ் சினோபார்ம் தடுப்பூசிகள் இன்று இலங்கைக்கு வரும் என கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

குறித்த தடுப்பூசி தொகுதிகளுடன் சீனாவினால் இலங்கைக்கு இதுவரை மொத்தம் 80 மில்லியன் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்தோடு இந்த மாதத்தில் மட்டும் இலங்கைக்கு கொண்டுவரப்படும் தடுப்பூசிகள் எண்ணிக்கை 7 மில்லியனாக அதிகரித்துள்ளது. இலங்கையில் மிகவும் பரவலாக சினோபார்ம் தடுப்பூசியை அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை சீன இராணுவம் வழங்கும் தடுப்பூசிகளை படையினர் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி-5)

# காபூல் விமான நிலைய குண்டு வெடிப்பு; உயிரிழப்பு 40 ஆக உயர்வு

## தாக்குதலைப் பொறுப்பேற்றது ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு



**(காபூல்)**

**காபூல் விமான நிலைய குண்டு வெடிப்பில் பலியானோர் எண்ணிக்கை 40 ஆக அதிகரித்துள்ளது. இதில் அமெரிக்கப் படைவீரர்கள் 13 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர் என தகவல் வெளியாகி உள்ளது.**

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் விமான நிலையத்திற்கு வெளியே நேற்று முன்தினம் இரவு அடுத்தடுத்து குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது.

இதில் பிரதான அபே கேட்டில் நிகழ்ந்த ஒரு குண்டு வெடிப்பில் ஏராளமானோர் தூக்கி வீசப்பட்டனர். இந்த தாக்குதலில் 13 பேர் இறந்திருப்பதாக முதற்கட்ட தகவல் வெளியானது.

குழந்தைகள் உட்பட பலர் காயமடைந்து பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கலாம் என கூறப்பட்டது.

காபூல் விமான நிலைய வெடிகுண்டு தாக்குதலுக்கு இந்தியா உட்பட பல்வேறு நாடுகள் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளன.

இதற்கிடையே, காபூல் விமான நிலைய குண்டு வெடிப்பு தாக்குதலுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ்.காரோஷன் என்ற அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. (நி-5)

# காபூல் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கப்படும்

## ஜோ பிடன் சூளுரை

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் காபூல் விமான நிலையத்தில் நடந்த தற்கொலைப் படைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 13 சேவை உறுப்பினர்களின் மரணத்திற்குப் பழிவாங்குவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோபிடன் உறுதியளித்தார்.

வெள்ளை மாளிகையில் உணர்ச்சியுடன் பேசிய பைடன், தாக்குதலுக்கு காரணமான இஸ்லாமிய அரசுடன் (ஐ.எஸ்) இணைந்த தீவிரவாதிகள் காரணம் என்பதை உறுதி செய்தார்.



அதேநேரம், அமெரிக்கா இந்தச் செயலை மறக்கவோ மன்னிக்கவோ மாட்டாது என்றும் கூறினார். (நி-5)

# காபூல் விமான நிலையத்தில் தண்ணீருக்கும் உணவுக்குமென ஆயிரக்கணக்கில் செலவிடும் மக்கள்



(காபூல்)

ஆப்கான் தலைநகர் காபூலில் உள்ள ஹமீது கர்சாய் விமானநிலையத்தில் காத்திருக்கும் மக்கள் அன்றாடம் உணவுக்கும், குடிதண்ணீருக்கும் பல ஆயிரம் ரூபாயை செலவழிக்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் தலிபான்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. ஆனால், அங்கு இன்னும் முறைப்படி ஆட்சி மாற்றம் நிகழவில்லை. இந்நிலையில், அமெரிக்கா, ஜேர்மனி, பிரான்ஸ் எனப் பல்வேறு நாடுகளும் ஆப்கனில் உள்ள தங்கள் நாட்டு மக்கள், தங்களுக்கு உதவிய ஆப்கானிஸ்தான் நாட்டவர், அந்நாட்டின் பொதுமக்கள் எனப் பலரையும் மீட்டு வருகின்றன.

ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேற தலைநகர் காபூலில் உள்ள சர்வதேச விமான நிலையத்தைச் சுற்றி ஆயிரக்கணக்கானோர் காத்திருக்கின்றனர்.

இந்நிலையில், காபூல் விமான நிலையத்தில் காத்திருக்கும் மக்கள் பல்வேறு இன்னல்களை சந்திக்க நேர்ந்துள்ளது. அங்கு ஒரு பாட்டில் குடிதண்ணீர் (இந்திய மதிப்பில்) ரூ.3000க்கும், ஒரு தட்டு உணவு ரூ.7000க்கும் விற்கப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடைக்காரர்கள் ஆப்கான் நாணயத்தின் படி வசூலிக்காமல் பொருட்களுக்கு அமெரிக்க டொலர் மதிப்பில் வசூலிப்பதால் இந்த விலையேற்றம் எனக் கூறப்படுகிறது.

காபூல் விமானநிலையம் முழுக்க அமெரிக்க, பிரிட்டன் இராணுவ வீரர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. எப்படியாவது காபூலில் இருந்து வெளியேறிவிட வேண்டும் என்று காத்திருக்கும் அப்பாவி மக்களின் அவலநிலை கருதி அவ்வப்போது பொது மக்களுக்கு தண்ணீர் பாட்டில்களை வழங்கி உதவி வருகின்றனர். (நி-5)

# கொவிட் வைரஸை செயலிழக்கச் செய்யும் வெள்ளி மற்றும் தாமிர நுண்ணிழை முகக்கவசம்

(மெக்ஸிகோ)

கொவிட் 19 தொற்று நோயை ஏற்படுத்தும் சார்ஸ்-கொ.வி-2 (SARS-CoV-2) வைரஸை செயலற்றதாக்கும் வெள்ளி மற்றும் தாமிர 3 அடுக்கு நுண்ணிழை கொண்ட (silver and copper nanolayers) முகக்கவசங்களை மெக்ஸிகோவின் யு.என்.ஏ.எம். பல்கலைக்கழக ஆய்வாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

மெக்சிகோவில் உள்ள ஜீவரெஸ் மருத்துவமனையின் சிகிச்சை பெற்றுவரும் கொவிட் 19 தொற்று நோயாளிகளிடம் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட வைரஸ்கள் இந்த வெள்ளி மற்றும் தாமிர 3 அடுக்கு நுண்ணிழை முகக்கவசத்தில் வைத்துப் பரிசோதனை நடத்தப்பட்டது.

இதில் வைரஸ் செறிவு அதிகமாக இருந்தால் அதனைச் சுமார் எட்டு மணி நேரத்தில் 80% க்கும் அதிகமாக இந்த முகக்கவசம் செயலற்றதாக்குகிறது. வைரஸ் செறிவு குறைவாக இருந்தால் இரண்டு மணி நேரத்தில் முற்றாக வைரஸ் செயலற்றதாகின்றமை ஆய்வில் உறுதிப்படுத்தப்பட்டது.

இந்த முகக்கவசத்தை பயன்படுத்திவிட்டு தூக்கி எறியும்போது அதனால் ஏனைய முகக்கவசங்கள் போன்று பாதிப்பு இருக்காது. அத்துடன், 10 முறை வரை அதன் வைரஸை இழக்கச் செய்யும் செயற்றிறன் இழப்பின்றி கழுவிப் பாவிக்க முடியும் எனவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் இந்த முகக்கவசம் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டு இதுவரை சந்தைக்கு விடப்படவில்லை. தற்போது ஒரு நாளைக்கு 200 வரையான முகக்கவசங்களே உற்பத்தி செய்யப்பட்டு வருவதாகவும் மெக்ஸிகோவின் யு.என்.ஏ.எம். பல்கலைக்கழக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி-5)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் சுரண்டப்படும் இயற்கை வளங்கள்



(அக்கராயன்)

முல்லைத்தீவின் ஜயன் கன் குளம், பழையமுறிகண்டி, புத்துவெட்டுவான், ஓட்டுசுட்டானின் கொக்காவில் ஆகிய பகுதிகளில் இயற்கை வளங்கள் வெளியில் கொண்டு செல்லப்படுவதாகவும் இதனை தடுத்து நிறுத்த கடந்த பத்தாண்டுகளாக நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என அப்பகுதி பொது அமைப்புகள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டங்களில் இவ்விடயம் ஆராயப்பட்டிருந்தாலும் மாவட்டச் செயலகத்தின் சட்டதிட்டங்களை மீறி வவுனியாவுக்கு அப்பால் இருந்து கிடைக்கப் பெறும் அனுமதிகளில் மணல், கிரவல், காட்டு மரங்கள் பெருமளவில் கொண்டு செல்லப்படுகின்றன.

இதற்கான அனுமதிகளை மாவட்டச் செயலகம் வழங்கவில்லை. அனுமதிகள் உயர் மட்டத்தில் இருந்தே கிடைக்கின்றன.

இதன் காரணமாகவே மணல் வெளியில் கொண்டு செல்லப்படுகின்றன. எனவே இதனை தடுக்க பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப்பகுதி பொது அமைப்புகள் கோரிக்கை விடுக்கின்றன. (4-5-350)

# மகப்பேற்று பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்

## மாதர் சங்கம் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் இருந்து அம்புலன்ஸ் மூலம் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு மகப்பேற்றிற்கு கொண்டு செல்லப்படும் பெண்கள் மீண்டும் அம்புலன்ஸில் மாங்குளம் வருவதற்கு முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாங்குளம் மாதர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் இருந்து பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த பலர் மகப்பேற்றிற்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் கொண்டு செல்லப்படுகின்றனர்.

குழந்தை கிடைத்தவுடன் முச்சக்கர வண்டியிலோ அல்லது பேருந்திலோ மகப்பேற்றினை நிறைவு செய்த பெண்கள் சிரமங்களுடன் திரும்ப வேண்டி உள்ளது.

தற்போது கொவிட் 19 அச்சுறுத்தல் உள்ளதன் காரணமாக பேருந்துகளில் பயணம் செய்வது பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் பாதுகாப்பானதாக இல்லை எனவும் மாதர் சங்கம் தெரிவித்துள்ளது. (4-5-350)

# அக்கராயன் ஆறு புனரமைப்பிற்கு 3 மில்லியன் நிதி தேவை

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் ஆற்றினை துப்பரவு செய்வதற்கு மூன்று மில்லியன் நிதி தேவைப்படுவதாக கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசனப் பொறியியலாளர் ரிரிசியந்தன் தெரிவித்தார்.

பெரிய மரங்கள் ஆற்றின் குறுக்கே வீழ்ந்து கிடக்கின்றன. இதன் காரணமாக அக்கராயன் குளம் வான் பாய்கின்ற போது நீரோட்டம் சீராக இடம்பெறாமல் வயல் நிலங்களுக்குள் பரவுகின்ற நிலைமை காணப்படுகிறது.

அக்கராயன் ஆறு துப்புரவு செய்யப்படுவதன் மூலம் வெள்ள நீர் பரவாத நிலைமை ஏற்படும்.

இதற்காக திட்டங்கள் வரைந்து மூன்று மில்லியன் நிதி தேவை என மாவட்டச் செயலகத்திடம் கையளித்து இருக்கின்றோம். நிதி கிடைத்தவுடன் அக்கராயன் ஆற்றினை துப்புரவு செய்வோம். இதன் மூலம் விவசாயிகளுக்கு பெரும் நன்மை ஏற்படும் எனவும் தெரிவித்தார். (4-5-350)

# விற்றமின் சி,டி மருந்துகளுக்கு தட்டுப்பாடு

(குருமன்காடு)

கொவிட் தொற்று காரணமாக வவுனியா மாவட்டத்தில் விற்றமின் சி மற்றும் விற்றமின் டி ஆகிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது.

நாட்டில் கொவிட் தொற்று வேகமாக அதிகரித்து வரும் நிலையில் தொற்றாளர்களை வீடுகளில் வைத்து சிகிச்சையளிக்கும் முறையும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அத்துடன் கோவிட் தொற்றில் இருந்து பாதுகாக்க நோய் எதிர்ப்பு சக்தியை வழங்க கூடிய விற்றமின் சி மற்றும் விற்றமின் டி ஆகிய மாத்திரைகளை பயன்படுத்துமாறு சில மருத்துவர்கள் அறிவுரை கூறியுள்ளனர்.

இதற்கமைவாக வவுனியா மாவட்டத்தில் பலரும் விற்றமின் சி மற்றும் விற்றமின் டி ஆகிய மருந்துகளை அதிகளில் கொள்வனவு செய்து வீடுகளுக்கு கொண்டு செல்வதனால் பல தனியார் மருந்தகங்களில் விற்றமின் சி மற்றும் விற்றமின் டி ஆகிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (4-5-250)

# முல்லைத்தீவில் இதுவரை 1571 பேருக்கு தொற்றுறுதி

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று முன்தினம் வரை 1 571 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் 578 பேர் தொடர்ந்தும் சிகிச்சையில் உள்ளதாகவும் 15 மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் தெரிவித்தார்.



முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் 578 பேர் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டு தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த ஆண்டு ஜனவரி தொடக்கம் தற்போது வரை 15 மரணங்கள் இடம் பெற்றுள்ளது 784 பேர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

இதனை விட தொழில் பாதிக்கப்பட்டவர்களுக்கான 2000 ரூபா கொடுப்பனவுகள் வழங்கும் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் இருக்கின்ற வேளையிலும் மக்கள் இன்னும் கவனயீனமாக அன்றாட வேலைக்கு செல்வதாக கூறி தேவையில்லாத விடயங்களை மேற்கொள்வதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸ் மற்றும் இராணுவத்திற்கும் அறிவுறுத்தல் வழங்கியுள்ளோம்.

மக்கள் நாட்டு நிலைமைகளை கருத்தில் கொண்டு அவதானமாக செயற்படுமாறும் அவர் தெரிவித்தார்.(4-5-281)

# கட்டுமானப்பணிகளை நிறுத்தாவிடின் இடிப்பதற்கு அனுமதி உண்டு

## கரைச்சி பிரதேச சபை தவிசாளர்

(முறிகண்டி)

இரணைமடு சந்தி பகுதியில் வீதியில் இராணுவத்தினரால் அமைக்கப்படும் கட்டுமான பணிகள் நிறுத்தப்படாவிடின் பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் இடிக்க முடியும் என கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் ஆளுகையின் கீழ் அமைந்திருக்கக்கூடிய இரணைமடு சந்தியை மையமாக வைத்து இராணுவத்தினரால் பாரிய வளைவு ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. இந்த வளைவை இடைநிறுத்தி உரிய அனுமதியின் பிரகாரம் அதனை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பிற்கு பல தடவை அறிவித்திருக்கின்றோம்.

இது தொடர்பாக சபைத் தீர்மானம் ஒன்றை பெற்று, சபையினுடைய 52வது பிரிவு அறிவுறுத்தலிற்கு அமைவாக அவற்றை இல்லாது செய்து விடுவதற்கும், அல்லது மேற்கொண்டு நீதிமன்றத்தை நாடுவதற்குமான தீர்மானத்தை நாங்கள் எடுத்திருக்கின்றோம்.

பல்வேறு அறிவுறுத்தல்கள் சபையினால் விடுக்கப்பட்டுள்ள நிலையில் இராணுவத்தினரின் இவ்வாறான செயற்பாடுகள் ஏற்க முடியாதவை எனவும் அவர் குறிப்பிட்டார்.

குறித்த கட்டுமானத்தினை பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் அகற்றுவதற்கும் பிரதேச சபைக்கு அதிகாரம் இருப்பதாகவும் தெரிவித்த அவர் அவ்வாறான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் பொழுது இராணுவத்தினர் ஆயுத முனையில் நிறுத்த முற்பட்டால் பொலிஸாரின் உதவி பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.(4-5-100)



வவுனியா மாவட்ட புதிய அரசாங்க அதிபராக பீ.ஏ.சரத் சந்திர நேற்று பதவியேற்றுக் கொண்டார். சர்வ மதத் தலைவர்களின் ஆசியுடன் மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ் குமார் மற்றும் மாவட்ட செயலக அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் முன்னிலையில் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

(படம்:-வசந்த ரூபன்)

# கொரோனா மரணங்களின் எண்ணிக்கையை குறைக்கும் நோக்கம் எதுவுமில்லை

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் அசேல



(கொழும்பு)

நாட்டில் கொரோனா மரணங்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கம் அரசுக்கு இல்லை. உண்மைத் தகவல்களையே ஊடகங்களுக்கு வழங்குகின்றோம் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

நாளாந்தக் கொரோனா மரணங்களின் எண்ணிக்கையை அரசு குறைத்து வருகிறது என எதிரணியினரால் முன் வைக்கப்படும் குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில்அவர்மேலும் தெரிவித்ததாவது,

"இலங்கையில் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை தினந்தோறும் அதிகரிந்து வருகிறது. அந்த எண்ணிக்கையை அப்படியே ஊடகங்களுக்குத் தெரியப்படுத்துகின்றோம். மரண எண்ணிக்கையில் குறைப்பு எதையும் நாம் செய்யவில்லை. மரண எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கம் சுகாதார அமைச்சுக்குக் கிடையாது.

கொரோனா மரணங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு நாட்டுக்கு நல்லதல்ல. இது நாட்டின்ஆபத்து நிலைமையை எடுத்துக்காட்டுகின்றது.

எனவே, தனிமைப்படுத்தல் சட்டத்துக்கமைய இறுக்கமான கட்டுப்பாடுகளுடன் மக்கள் தமது அத்தியாவசிய நாளாந்தச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்" என அவர் தெரிவித்தார். (நி-5)

# வீடுகளில் அன்டிஜன் பரிசோதனைகளை மேற்கொள்ள நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற் றின் பரவல் அதிகரித்த வண் ணம் உள்ளது. இந்நிலையில் நாளாந்த கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 4500 ஆகவும் இறப்பு எண்ணிக்கை 200 ஆகவும் அதிகரித்துள்ளது.

இந்நிலையில்வீடுகளிலேயே ரபிட் அன்டிஜன் பரிசோதனைகளை மேற்கொள்ளும் திட்டத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-5)

### ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்

# விசாரணைகளை தடுத்தவர்களை வெளிப்படுத்துங்கள் - ஹர்ஷண

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கு தடையாக இருந்தவர்களின் விபரங்களை வெளிப்படுத்துமாறு ஐக்கிய மக்கள் சக்திபொலிஸ்மா அதிபரிடம் சவால் விடுத்துள்ளது.

தாக்குதல் தொடர்பான விசாரணைகள் தொடர்பாக அண்மையில் பொலிஸ்மா அதிபர் தெரிவித்த கருத்து குறித்து நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜ கருணா இவ்வாறு தெரிவித்தார்.

ஆகவே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்கு இடையூறு விளைவித்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (நி-5)

# ஒட்சிசன் சிலிண்டர்களை சேமித்து வைக்க வேண்டாம்

(கொழும்பு)

பொதுமக்கள் அநாவசியமாக ஒட்சிசன் சிலிண்டர்களை சேமித்து வைப்பது ஒரு தவறான நடவடிக்கை என்று ரிட் ஜ்வே சிறுவர்கள் வைத்தியசாலையின் பணிப்பாளர், வைத்தியர் ஜி.விஜேசூரிய தெரிவித்தார்.

மேலும், நோயாளிக்கு அதிகமாக ஒட்சிசன் வழங்குவதனாலும், நிமோனியா நிலை ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (நி-5)

# மான் இறைச்சியுடன் மூவர் கைது

(புத்தளம்)

புத்தளம், தப்போவ சரணாலய எல்லைப்பகுதிக்கு உட்பட்ட குடாவெவ பகுதியில் 18 கிலோ கிராம் மான் இறைச்சியுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கருவலகஸ்வெவ வனவிலங்கு அலுவலக அதிகாரிகளுக்கு நேற்று கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் குறித்த பகுதியில் மேற்கொண்ட விஷேட சுற்றிவளைப்பின்போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2390

### யதுஷியா

விடும் ஆபிஸ்ஸ்ம் ஒன்னு தான்



பொழப்பு நடக்கனும்னா
என்ன திட்டு வாங்கினாலும்
போய் தான்ஆகனும்...
தப்பிக்க எல்லாம் முடியாது

### கனிஸ்ரா

வலிக்காத மாதிரி அடிச்சிட்டு
தூங்க வைக்கிறது அம்மா...!
வலிக்கிற மாதிரி அடிச்சிட்டு
தூங்காம தவிக்கிறது
அப்பா...!



### ஜீவன்

மனைவியை பாதியில் விட்டு
போன பத்தர் கடவுளாகி விட்டார்,
மோடி பிரதமரா ஆயிட்டார்...



மனைவியை நேசிக்கும் சராசரி
கணவன் கடன்காரன் ஆயிட்டான்...
டெய்லி திட்டும் வாங்குறான்...

### சாமி ராஜ

நன்கு படித்த, குணமுள்ள, நல்ல
குடும்பத்தைச் சேர்ந்த பெண்
உங்களுக்கு மணமகளாக அமைவாள்



இதுக்கு பொண்ணு இல்லன்னு
சொல்லிட்டு போங்கையா...

### பவன்

மச்சி லவ் மேரேஜ்,
அரென்ஞ்டு மேரேஜ்...
எது பெஸ்ட்டு...



கள்ளிப்பால்ல ஹார்லிக்ஸ்
போட்டு குடிச்சா என்ன? இல்ல
பூஸ்ட் போட்டு குடிச்சா என்ன?...

### மேனுயா



கண்ணுக்கு
தெரிந்த
மனிதரை
மதிக்காவிட்டால்,
கண்ணுக்கு
தெரியாத
மனிதரை
மதித்தும்
பயன் இல்லை

-அன்னை தெரசா

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஊரடங்கால் மட்டும் கொரோனாவை கட்டுப்படுத்த முடியாது - சவேந்திர சில்வா

(கொழும்பு)

**"இலங்கையில் நாளாந்தம் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. தொடர் "ஊரடங்கு" மூலம் ஊடாகக் கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியும் என்று மக்கள் எண்ணக்கூடாது. மக்கள் அனைவரும் பொறுப்புணர்வுடன் செயற்பட்டாலே கொரோனாவை இல்லாமல் ஒழிக்கலாம்."**



என கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் நேற்று முன்தினம் அவர் மேலும் தெரிவித்ததாவது "மக்கள் ஒவ்வொருவரும் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடித்துப் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும். அப்போது தான் கொரோனாவைக்கட்டுப்படுத்த முடியும்.

அதேவேளை, கொரோனாத் தடுப்பூசிகளையும் பெற்றுக்கொள்ள மக்கள் அனைவரும் முன்வர வேண்டும். எக்காரணம் கொண்டும் தடுப்பூசிகளைப் பெறுவதில் மக்கள் தயக்கம் காட்டக்கூடாது.

தடுப்பூசிகள்தான் எமக்குப் பாதுகாப்புக் கவசமாக இருக்கின்றது. தடுப்பூசிகளைப் பெற்றவர்களும் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி சமூகத்தில் பொறுப்புணர்வுடன் நடக்க வேண்டும் என சவேந்திர சில்வா தெரிவித்தார். (நி-5)

# சகல பிரஜைகளுக்கும் நவம்பருக்குள் தடுப்பூசி

## சுகாதார அமைச்சர்



(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதத்திற்குள் 18 வயதிற்கு மேற்பட்ட சகல பிரஜைகளுக்கும் முழுமையாக தடுப்பூசி செலுத்தும் பணிகள் நிறைவு செய்யப்படும் என சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கியூப தூதுவரை நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) சந்தித்து கலந்துரையாடிய போது, சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை செப்டெம்பர் மாத நடுப்பகுதியில் 30 வயதிற்கு மேற்பட்ட சகலருக்கும் தடுப்பூசி வழங்கும் பணிகள் நிறைவு செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் சகல பிரஜைகளுக்கும் முழுமையான தடுப்பூசிகள் செலுத்தப்பட்டதை அடுத்து 3ஆம் கட்டத் தடுப்பூசி வழங்குவது குறித்து அவதானம் செலுத்தப்படும்.

இதேவேளை எதிர்காலத்தில் வீடுகளுக்கு சென்று அன்டிஜென் பரிசோதனை செய்வதற்கான நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-5)

# சுற்றுலாத்துறையை மீட்டெடுப்பதில் அரசு தீவிர கவனம் - தயாசிறி தெரிவிப்பு

(கொழும்பு)

ஏற்றுமதியை அதிகரிப்பது மற்றும் சுற்றுலாத்துறையை மீட்டெடுப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்துகிறது என இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

வெளிநாட்டு இருப்புக்களில் குறைவு காணப்படும் நிலையில், அரசாங்கம் ஏற்றுமதியை அதிகரிக்க விரும்புகிறது.

அதன்படி முக்கிய அமைச்சர்களை அழைத்து நாட்டின் ஏற்றுமதியை அதிகரிக்கும் முறை குறித்து நிதியமைச்சரும் விவாதித்தார் என தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

இதேவேளை, 2020 ஆம் ஆண்டில், நாட்டிற்கு வருகை தந்த மொத்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 15 ஆயிரமாக இருந்தாலும் அந்த எண்ணிக்கை இந்த ஆண்டு மேலும் குறைந்துள்ளது என சுட்டிக்காட்டினார்.

ஆகவே, டிசெம்பர் மாத இறுதிக்குள் பெரும்பான்மையான மக்களுக்கு தடுப்பூசி போடப்பட்டால், டிசெம்பர் முதல் நாட்டின் சுற்றுலாத் துறையை மீண்டும் தொடங்க முடியும் என்றும் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார். (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மூச்சு

ஒரு ஆள் அசையாமல் கிடக்கிறார். அவர் இருக்கிறாரா – போயிட்டரா என்பதை எப்படி முடிவு செய்கிறோம்? அவருடைய மூக்குக்கு முன்னாடி புறங்கையை வைத்துப்பார்க்கிறோம். மூச்சு வருதா இல்லையா என்பதை கண்டுப்பிடிக்கிறதிற்காக.மூச்சு என்பது அவ்வளவு முக்கியமான ஒரு விடயம் சுவாசம் இல்லை என்றால் எதுவும் இல்லை.

நம்முடைய பூமி இருக்கே அது கூட சுவாசிக்கிறது... என்பதை சோவியத் விஞ்ஞானிகள் கண்டுப்பிடித்திருக்கிறார்கள். பூமிக்கு மேலே இருக்கிற மண் அடுக்கிலே காற்றிலே உள்ள ஒட்சிசன் ஆக்சிகரணமுடையது என்று தான் இதுவரைக்கும் எல்லோரும் நம்பிக்கொண்டிருந்தார்கள்.

ஆனால் இப்போது என்ன கண்டுப்பிடித்து இருக்கிறார்கள் என்றால் அந்த ஒட்சிசன் பூமிக்குள்ளே ஒரு கிலோ மீற்றர் ஆழம் வரைக்கும் ஊடுருவிப் போகுதாம். பூமிக்குள்ளே இருக்கிற நீர்நிலை அடுக்குகள் தான் நுரையீரல் செய்கிற வேலையை செய்யும்.

நம்முடைய உடம்பிலே நுரையீரல் இல்லை என்றால் ஒன்றும் நடக்காது. ஒரு மரத்தை தலைகீழாக தொங்கபோட்டால் எப்படி இருக்கும்? அப்படித் தான் இதுவும் (நுரையீரல்) இருக்கும். இடது பக்கம் ஒன்று. வலதுப்பக்க நுரையீரல் கொஞ்சம் பெரிதாக இருக்கும். நுட்பமான நரம்புக் குழாய்கள் அதிலே இருக்கும்.

கோடிக்கணக்கான நுண்ணிய குழாய்களை வைத்துக் கொண்டு தான் அது வேலை செய்கிறது. 25 கோடி குழாய்கள் இருக்கிறது. அதை அப்படியே முழுசா பிரித்துப் பரப்பினால் ஒரு டென்னிஸ் கோர்ட்லே பாதி பரப்பளவு இருக்கிறது.

நுரையீரல் நிறம் கருஞ்சிவப்பு தான். புகை அதிகமாக உள்ளே போய்விட்டது என்றால் அது கருப்பாக ஆகிவிடுகின்றது. காற்றிலே உள்ள பிராணவாயுவை இது இழுத்து எடுத்துக்கொண்டு இரத்தத்தை சுத்தப்படுத்துகின்ற முக்கியமான வேலையை அது செய்கிறது. அசுத்த காற்றை வெளியே அனுப்பிவிடுகிறது.

ஒருத்தர் வேகமாக ஓடி வந்தார். அவருக்கு மூச்சு இறைக்கும். பயங்கரமாக எதையாவது பார்த்துவிடுகிறார். உடனே மூர்ச்சையாகிடுவார். இது மாதிரி சமயங்களிலே வேறு எந்த தூண்டுதலும் இல்லாமல் நுரையீரல் தானாகவே இயங்கும்.

இப்படி ஒரு அவசியம் ஏற்படுகிறப்போது இயக்கத்தைத் தூண்டிவிடுகிற முக்கியமான இணைப்பு மூளைக்குக்கீழே முதுகு எலும்புக்கு மேற்பகுதியிலே உள்ளது. அது உடனே சுவாசத்திற்கு அவசர உதவியைக் கொடுக்கின்றது.

இப்போது ஒருத்தர் பேசாமல் உட்கார்ந்திருக்கின்றார். இந்த சமயத்திலே அவருக்கு ஒரு பங்கு காற்று தேவைப்படுகின்றது என்று வைத்துக்கொள்ளுங்கள். அவர் எழுந்து நடக்கும் போது ஒன்றரை மடங்கு தேவைப்படும். ஓடினார் என்றால் மூன்று மடங்கு தேவைப்படும். படுத்திருக்கிறப் போது அரைமடங்கு தான் தேவைப்படும். இதற்கு நிமிடத்திற்கு 16 தடவை மூச்சு விட்டாக வேண்டும்.

இப்படி சாதாரணமாக உள்ளே இழுக்கின்ற காற்று கொஞ்சம்தான் இருந்தாலும் இது போல எட்டு மடங்கு காற்றை உள்ளே இழுத்து வைத்துக்கொள்கிற சமார்த்தியம் நுரையீரலுக்கு இருக்கின்றது.

தண்ணீர், நுண்கிருமிகள், இரசாயனப்பொருட்கள் இப்படி எது உள்ளே போனாலும் நுரையீரல் சமாளிக்கும். முப்பது வருடமாக விடாமல் புகைப்பிடிக்கின்றவர்கள் தொடர்ந்து உள்ளே அனுப்பி வைக்கின்ற புகையைக் கூட சமாளிக்கின்றது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

உள்ளே போகின்ற புகை நுட்பமான சுவாச முடிச்சுக்களை அழித்துவிடுகிறது. கரிப்புகை அது மேலே படிந்து உபயோகம் இல்லாமல் செய்துவிடுகிறது. ஆனாலும் தேவைக்கு அதிகமாக எட்டு மடங்கு கூடுதலாக சுவாச முடிச்சுக்கள் நம் உடம்புக்குள்ளே உள்ளது. அதனாலே சமாளிக்க முடிகிறது.

சமாளிக்க முடியவில்லை என்றால் சிலசமயம் மூச்சுத்திணறும் அதை ஒரு எச்சரிக்கையாக எடுத்துக்கொண்டு புகைப்பிடிக்கின்ற பழக்கத்தை விட்டுவிட வேண்டும்.

ஆனால் அப்படி யாரு விடுகிறார்? இணைபிரியாத இரண்டு நண்பர்கள். இரண்டு பேரும் விடாமல் சிகரெட் குடிக்கின்றவர்கள். அதிலே ஒருத்தன் செத்துப் போய்விட்டான். இன்னொருத்தன் அதற்கு அப்புறம் இரண்டு இரண்டு சிகரெட்டா குடிக்க ஆரம்பித்தான்.

"ஏன் இப்படி செய்கிறார்" என்று கேட்டார்கள். நான் ஒரு சிகெரெட் தான் குடிக்கின்றேன் செத்துப்போன என் பிரண்டுக்காக இன்னொரு சிகெரெட் குடிக்கின்றேன் என்றான். "இது ரொம்ப ஆபத்து. விட்டுவிடு" என்றார்கள். "சரி" என்று ஒத்துக் கொண்டான் ஆனால் அதற்கு அப்புறமும் ஒரு சிகரெட் வீதமாக குடித்துக் கொண்டிருந்தான்.

"சிகரெட் பழக்கத்தை நீ இன்னும் விடவில்லையா?" என்று கேட்டார்கள். "அந்தப் பழக்கத்தை நான் எப்போது விட்டுவிட்டேன் இப்போது நான் குடிக்கிறது என் நண்பனுக்காக என்றான்." இவர்களையெல்லாம் எப்படி சேர் சரி செய்வது?




## கிழவர் கேட்ட கேள்வி

"மன்னா! இந்த எளியவன் சில வார்த்தைகள் பேசலாமா?" என்றார். "பேசுங்கள்!"" என்றான் மன்னன்.

"நடுவர்களே.... எந்த அடிப்படையில்ஈழ மங்கையின்இசைதான்சிறந்தது என்று தீர்ப்பு வழங்கினீர்கள்?" என்றார்.

திடுக்கிட்டனர்நடுவர்கள். முதியவர் ஈழத்து நங்கையின் இசையையும், பாணபத்திரரின் மனைவி இசைத்த இசை இரண்டிற்கும் உள்ள சிறப்புகளையும், குறைகளையும் புட்டு புட்டு வைத்தார்.

"பாணபத்திரரின் மனைவி இத்தனை சிறப்பாக இசைக்க, அவரை எப்படி தோற்றவர் என்று சொன்னீர்கள்?" என்றார் முதியவர்.

மன்னரின் முகத்தை பார்த்தனர் நடுவர்கள். "நீங்கள் எல்லாம் என்ன நடுவர்கள். மனச்சாட்சிபடி தீர்ப்பு வழங்காமல் பொய் தீர்ப்பு அளிக்கிறீர்களே....?இது எந்த விதத்தில் நியாயம்?" என்றார் முதியவர்.

"நடுவர்களே...இசைக்கும், இறைவனுக்கும் சம்பந்தம் உண்டு. இசைக்கு அநீதி செய்வதன் மூலம் இறைவனையே அவமதிக்கிறீர்கள்.

இசைப்பட வாழ்ந்த பாண்டிய மன்னர்கள் எங்கே? வசைபட வாழ்ந்து முன்னோர் பெயருக்கு அவப்பெயரை கொண்டு வரும் இந்தப் பாண்டியன் எங்கே?" என்றார் கிழவர்.

கடும்சினம்கொண்ட மன்னன், "என்னையே குற்றம் சாட்டும் அளவிற்கு உங்களுக்கு என்ன துணிச்சல்? பிடித்து இந்தக் கிழவரை கட்டுங்கள்," என்றான்.

கிழவரைத் தொட்ட காவலர்கள் மின்சாரத்தை தொட்டதுபோல் கீழே விழுந்தனர்.

மறுநிமிடம் கிழவரைக் காணவில்லை. கோயில் கிடுகிடுவென நடுங்கியது. அனைவரும்திடுக்கிட்டனர். கிழவர் இருந்த இடத்தில் இறைவன் காட்சியளித்து மறைந்தார்.




அதிர்ச்சியடைந்த ராசராசன் தரையில் விழுந்தான். தன் தவறை மன்னிக்கும்படி வேண்டினான்.

"நீதி தவறி செயற்பட்ட நான் இனி அரியணையில் அமருவதற்கு தகுதி இல்லை. இந்தக் கணமே நான் அரச வாழ்வை துறந்து ஆன்மீக வாழ்விற்குச்செல்கிறேன்!"என்றான்.

தன் மகனிடம் அரச பொறுப்பை ஒப்படைத்து விட்டு ஆன்மீகத்தில் ஈடுபட்டான் மன்னன். (முற்றும்)

# மகாபாரதம்




பிரமதேவர் இயற்றிய இந்த நீதி சாஸ்திரத்தை சிவன் மக்கள் ஆயுள் வரவரக் குறைந்து வருவதைக் கண்டு பத்தாயிரம் அத்தியாயங்களாக அமைத்து அதற்கு வைசாலட்சம் என்று பெயரிட்டார்.

இந்திரன் இதனை இன்னும் சுருக்கி "பாஹூதந்தகம்"எனப் பெயரிட்டார். அதனைப் பிரகஸ்பதிமூவாயிரம் அத்தியாயங்களாக்கி "பாரஹஸ்பத்தியம்" என்று பெயரிட்டார். சுக்கிரர் அதனை ஆயிரம் அத்தியாயங்களாகச்சுருக்கினார்.

இவ்விதம்மக்கள்ஆயுள் குறைவைக் கருதி இந்த நீதி சாஸ்திரம் மாமுனிவர்களால் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

### அரச பரம்பரை தோற்றம்

தேவர்கள் திருமாலிடம் சென்று மக்களை அடக்கி ஆளத்தக்க பெருமை மிக்க ஒருவனை தருமாறு வேண்டினர். திருமால் "விஜரஸ்" என்னும் புத்திரனை உண்டாக்கினார்.

ஆனால் விஜரஸ் மன்னனாக விரும்பவில்லை. துறவியானார். அவருக்கு மகனாகப் பிறந்த கீர்த்திமான் என்பவரும் துறவுக் கோலம் பூண்டார். அவருக்கு மகனாகக் கர்த்துமர் என்பவர் பிறந்தார். அவருக்கு மைந்தனாக அனங்கன் பிறந்தார். அவர் தண்டநீதியில் வல்லவராக ஆட்சி புரிந்தார்.

அனங்கனுக்குப் புதல்வனாக அதிபலன் என்பவன் பிறந்து சிறந்த முறையில் ஆண்டான். அவன் தருமதேவரின் மகளான சுநீதியை மணந்து காம வயப்பட்டு அவளிடம் மயங்கிக் கிடந்தான்.

அவர்களுக்கு வேனன் பிறந்தான்.அவன்கொடுங்கோலனாகத் திகழ்ந்தான். தருமநெறி தவறிய அவனை தவ முனிவர்கள் கொன்றனர்.

வேனனுக்குப்பிறந்த முதல் மகன் நிஷதன் ஆவான். குள்ளமாகவும், கொடூரனாகவும்காணப்பட்ட அவனிடமிருந்து குரூரமான நிஷாதர்கள் தோன்றினர்.

அவர்கள் விந்திய மலையை இருப்பிடமாகக்கொண்டனர். அவர்கள் மிலேச்சர்கள் எனப்பட்டனர்.

வேனனின்இரண்டாவது மகன்பெயர்பிருது. அவன் இந்திரனுக்கு நிகரானவன். தனுர் வேதத்தில் சிறந்தவன். உலகிற்கு நன்மைபுரிந்து ஆட்சிசெய்ததால் உத்தமன் எனப் போற்றப்பட்டவன். (தொடரும்)

> துன்பத்தால் தாக்குண்டபோது, உயர்வு மேலும் உயரும் என்ற உண்மையை அறிந்தேன்! இதுவே துன்பம் எனக்கு இழைத்த நன்மை.
>
> – ஷேக்ஸ்பியர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மக்கள் வாழமுடியாத நாடாகிவிட்ட இலங்கை

நாடு என்பது எவ்வாறாக இருக்க வேண்டும் என்பதை வள்ளுவப் பெருமான் வகைமைப்படுத்துகின்றார்.

நாடு என்ற அதிகாரத்தின் ஊடாக ஒரு நாட்டின் தன்மை, இயல்பு எவ்வாறாக இருக்க வேண்டும் என்பதை வள்ளுவப் பெருமான் பட்டியற்படுத்துகின்றார்.

நாடு என்ற அதிகாரத்தின் முதலாவது குறள் ***தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வரும் சேர்வது நாடு*** என்பதாகும். குறையாத விளைபொருளும் தகுதியுடைய சான்றோர்களும் தாழ்வில்லாத செல்வந்தர்களும் ஒன்று சேர்ந்திருப்பதே நாடு என்பது பொருள். ஆக, ஒரு நாட்டில் மக்களும் இதர ஜீவராசிகளும் உண்பதற்கான உணவுப் பொருள் குவிந்து கிடக்கவேண்டும். அறத்தை எடுத்துரைக்கவல்ல சான்றோர்கள் அதிகமாக இருக்கவேண்டும்.

எக்காலத்திலும் ஈகை குன்றாத செல்வச் செழிப்புடையவர்கள் வாழவேண்டும். அதுவே ஒரு நாட்டுக்கான இயல்பாம்.

அந்த வகையில் இலங்கையை நோக்கும் போது, இலங்கை மக்கள் வாழக்கூடிய நாடு என்ற இயல்பை இழந்து வருகிறது என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

ஆம், ஒருபுறம் கொரோனாத் தொற்றால் எங்கும் மரண ஓலம். இறந்தவர்களின் உடல்களைத் தகனம் செய்வதுகூடப் பேரிடர்.

இதற்குமேலாக நோய்த் தொற்றைத் தாங்க முடியாமல் அவலப்படும் பல்லாயிரக்கணக்கான மக்கள் என எங்கும் பிணி, மக்களைப் பீடித்து நிற்கிறது.

இதற்குமேலாக உணவுப்பொருட்களின் விலை அதிகரிப்பும் தட்டுப்பாடும் மக்களின் சீவனோபாயத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

சமகால நிலைமை இதுவாக இருக்கையில், கொரோனாத் தொற்றால் நாடு பேரபத்தை சந்திக்கப் போகிறது என மருத்துவ சமூகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஆக, ஒட்டுமொத்தத்தில் நோயும் வறுமையும் பசியும் பட்டினியும் இலங்கை மக்களைச் சூழ்ந்து நிற்கையில், மக்கள் வாழக்கூடிய நாடு என்ற தகைமையை இலங்கை இழந்து நிற்கிறது என்பதுதான் உண்மை.

சிவபூமி ஆகிய அழகிய இலங்கைத் திருநாடு இவ்வாறானதொரு அவலத்தை சந்திப்பதற்கு காரணம் என்ன என்று ஆராய்ந்தால்,

இந்த மண்ணில் நடந்த இனப்படுகொலைகளும் அக்கிரமங்களும் மனித வதைகளும் நில ஆக்கிரமிப்புக்களும் அடிமைத்தனங்களுமாக ஒரு பெரும் மனிதப் பேரவலம் நடந்ததன் விளைவே இவை எல்லாம் என்பதை உணரமுடியும்.

உண்மை, அறத்தை போதிக்கவல்ல சமயத் தலைவர்கள் மதத்தின் பெயரால் மிகப் பெரும் கொடுமைகளைச் செய்கின்றனர்.

செங்கோல் ஏந்தி அரசாட்சி செய்ய வேண்டியவர்கள் இனத்தின் பெயரால் தமிழ் மக்களை சிறைகளில் அடைத்து வதைக்கின்றனர்.

மாறாக, தம் இனத்தவராயின் குற்றவாளி என நீதிமன்று தீர்ப்பளித்தாலும் அவர்களுக்கு மன்னிப்பு வழங்குகின்றன.

இதற்கு மேலாக எல்லா மக்களையும் சமமாகக் கருதி பாதுகாப்பு வழங்க வேண்டிய படைத் தரப்பு தமிழ் மக்கள் என்றவுடன் அவர்களை எதிரிகளாகப் பார்க்கின்றனர். இத்தகைய அக்கிரமத்தனங்கள் பல வருடங்களாகத் தாண்டவம் ஆடியதன் விளைவுதான் இலங்கை, மக்கள் வாழும் நாடு என்ற இயல்பை இழந்து நிற்பதற்கு காரணமாயிற்று எனலாம்.

### தமிழ்நாட்டில் தஞ்சமடைந்துள்ள

# ஈழத் தமிழர் நலனுக்காக ரூ.317 கோடி நிதி ஒதுக்கீடு

## சட்ட சபையில் முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

(சென்னை)

தமிழ்நாட்டில் ஏதிலிகளாக தஞ்சமடைந்து ஏதிலிகள் முகாம்களிலும், வெளிப்பதிவு முறையிலும் தங்கியுள்ள ஈழத் தமிழர் நலனுக்காக ரூ.317 கோடி நிதிஒதுக்கியுள்ளதாக தமிழ்நாடு சட்டமன்றத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது குறித்து, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நேற்று 110 ஆவது விதியின்கீழ் ஒரு அறிக்கை வாசித்தார். அதில் கூறியிருப்பதாவது,

“கடல்நீர் ஏன் உப்பாக இருக்கிறது என்றால், கடல் கடந்து வாழும் தமிழர்களின் கண்ணீரால்” என்று எழுதினார் பேரறிஞர் பெருந்தகை அண்ணா. அத்தகைய பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வழி நடக்கக்கூடிய இந்த அரசின் சார்பில், கடல் கடந்து வந்த இலங்கைத் தமிழ் மக்களின் கண்ணீரைத் துடைக்கக்கூடிய வகையில் சில அறிவிப்புகளை சட்டப்பேரவை விதி 110 இன்கீழ் வெளியிட நான் விரும்புகிறேன்.

இலங்கை நாட்டில் வாழும் தமிழ் மக்கள் 1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்திற்குப் பிறகு, கடல் கடந்து தமிழ்நாட்டிற்கு வரத் தொடங்கினார்கள். அத்தகைய தமிழ் மக்களை அன்று முதல் இன்று வரையிலும் நாம் அரவணைத்துக் காப்பாற்றி வருகிறோம். அவர்களுக்கு வாழ்வாதாரம் வழங்கி வருகிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற தருணங்களில் எல்லாம் இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இலங்கைத் தமிழர்களின் நலனில் எப்போதும் அக்கறை கொண்ட முத்தமிழறிஞர் கலைஞருடைய ஆட்சியிலே, கடந்த 1997-1998 ஆம் ஆண்டில், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு 2 கோடியே 6 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 3 ஆயிரத்து 594 புதிய வீடுகள், தலா 5 ஆயிரத்து 750 ரூபாய் செலவில் கட்டிக் கொடுக்கப்பட்டன. இங்குள்ள தமிழர்களை மட்டுமல்ல கடல் கடந்து வாழக்கூடிய தமிழர்களையும் காக்கக்கூடிய அரசுதான் இந்த அரசு என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## கொரோனாவினால் 27 பொலிஸார் இதுவரை மரணம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இதுவரை 27 பொலிஸார் உயிரிழந்துள்ளதாகவும் அவர்களில் 10 பேர் இம்மாதத்தில் மட்டும் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.

இவ்வாறு உயிரிழந்த பொலிஸாரில் பெரும்பாலானவர்கள் கோவிட் நிமோனியா நிலைமை காரணமாக உயிரிழந்துள்ளதாக அந்தத் தகவல்கள் குறிப்பிட்டன.

இம்மாதம் முதலாம் திகதி முதல் நேற்று வரையிலான காலப் பகுதியில் (27 வரை) 10 பொலிஸார் கொரோனாவால் உயிரிழந்துள்ள நிலையில்,

அவர்கள் கித்துல்கல, கலஹா, தெமட்டகொடை, காலி, முகத்துவாரம், உடுகம, அம்பன்பொல, தேசிய பொலிஸ் கல்லூரி, மட்டக்களப்பு மற்றும் கோகலை ஆகிய பொலிஸ் நிலையங்களில் சேவையாற்றியவர்களே இவ்வாறு உயிரிழந்தவர்களாவர். (ம-3)

## வடக்கில் ஓகஸ்ட் 26 வரை கோவிட்டால் 327 பேர் பலி

### யாழில் மட்டும் 244 பேர் உயிரிழப்பு

வடக்கு மாகாணத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை (ஓகஸ்ட் 26)வரை 23 ஆயிரத்து 36 பேர் கோவிட்-19 நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 327 பேர் உயிரிழந்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்திலேயே அதிளவானோர் உயிரிழந்துள்ளனர். நேற்று முன்தினம் வரை 224 பேர் யாழ்ப்பாணத்தில் கோவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 224 பேரும் வவுனியா மாவட்டத்தில் 55 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 18 பேரும் முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் தலா 15 பேரும் கோவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளனர். (ம-3,18,33)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை 29 ஆம் திகதி காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** செல்வமஹால் திருமண மண்டபம், கொக்குவில் சந்தி, பூநாறிசந்தி, சிவப்பிரகாசம் வீதி, மருத்துவ பீட அரங்கம், பொக்ஸ் ரெஸ்ட் (பிறைவேற்) லிமிடெட், மருத்துவ பீடம், அச்சுகூடம் கே.கே.எஸ். வீதி, ஞானபண்டிதா பாடசாலை, மாவடி, திருநெல்வேலி, நந்தாவில், பிரம்படி கொக்குவில், சைவோ கோயில் வீதி ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சிபிரதேசத்தில்** நன்னீர் மீன் உற்பத்தி நிலையம், இரணைமடு விமானப்படை, வட்டக்கச்சி பண்ணை, கறுப்பிக்குளம், கோவிந்தன்கடைச் சந்தி, மாயவனூர், பன்னங்கண்டி, இராமநாதபுரம், சின்சந்தை, உடைச்சகண்டி, வட்டக்கச்சி ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** கூமாங்குளம் காய் சிறுவர் இல்லத்திலும்

**மன்னார் பிரதேசத்தில்** அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, எருக்கலம்பிட்டி நீர்வழங்கல் திட்டம், கிரி ஐஸ் தொழிற்சாலை, தொழிற்பேட்டை, கச்சேரி வளாகம், மன்னார் மருத்துவமனை, மன் னார் நீர்வழங்கல் சபை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கடற்படை முகாம், ஓலைத்தொடுவாய், புதிய சில்க்ரோடு அகுடிக் கம்பனி பிறைவேற் லிமிட்டட் (கடல் உணவுக் களஞ்சியம்)பெரிய கரைசல் பல்மெய்ரா ஹவுஸ்-தலைமன்னார் பல்மெய்ரா ஹவுஸ், தப்ரபேன் உறைந்த உணவு (இறால் பண்ணை), எருக்கலம்பிட்டி மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், தலைமன்னார் வைத்தியசாலை, தலைமன்னார் கடற்படை முகாம், ரைமக்ஸ் ஆடை, வங்காலைப்பாடு சென்ட் லார்ட்ஸ் ஐஸ் தொழிற்சாலை, நீர் வழங்கல்- தோட்டக்காடு இளைஞர் படை பயிற்சி மையம், கார்கில்ஸ் புட் சிட்டி, மன்னார், இலங்கை போக்குவரத்துச் சபை மன்னார், தள்ளாடி பயலொக், நடுக்குடா, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, கொன் வென்ட் வீதி, எழுத்தூர், எமில்நகர், எருக்கலம்பிட்டி, எரிபொருள் நிரப்பு நிலையத்தடி 4 ஆவது மைல்கல், ஜோசப் வாஸ் நகர், கடலேரி வீதி, கட்டுகாரங்குடியிருப்பு, கரைசல் திட்டம், கீரியங்குடியிருப்பு, கொன்னையன் குடியிருப்பு, குருசுபாடு கடற்படை முகாம், மாலுவாடி சந்தி, மன்னார் நகரம், மூர் வீதி, முள்ளிப்பள்ளம், நளவன்பாடி புதுத்தெரு (பள்ளிமுனை), ரைமக்ஸ் ஆடையகம் அருகில், இளையோர்சேவை மையத்தடி, ஓலைத்தொடுவாய், ஓல்லிமோட்டை, படப் பாடி நீர்வழங்கல், பள்ளிமுனை, பருத்திப்பண்ணை, பாவிலுப்பட்டான் குடியிருப்பு, பெரிய கரைசல், பேசாலை, புதுக்குடியிருப்பு திட்டம், புதுக்குடியிருப்பு, புகையிரத நிலையம்- சாந்திபுரம், சிலாவத்தை முகாம் சந்தி, சிறுநாவற்குளம், சிறுதோப்பு, சவுத்பார் இராணுவ முகாம், மன்னார் ஸ்ரீலங்கா ரெலிகொம், புனித செபஸ்ரியன் தேவாலயம், சணி கிராமம், தலைமன்னார், தலைமன்னார் கப்பல் வீடமைப்பு திட்டம், தலை மன்னார் புகையிரத நிலையம், தாழ்வுப்பாடு, தாராபுரம், தாராபுரம் திட்டம், தரவன்கொட்டு, தோட்டவெளி, துள்ளு குடியிருப்பு தும்பு தொழிற்சாலை, துள்ளுகுடியிருப்பு திட்டம், மன்னார்யுசிமைதானம், வங்காலைப்பாடு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும். (நி-5)

# மாகாண சபைத் தேர்தல்கள்

19

கலாநிதி க.தவலிங்கம்,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



(1) ஊவா மாகாண சபையின் பதவிக்காலம் 1998.06.06 திகதியும், (2) மத்திய மாகாண சபையின் பதவிக்காலம் 1998.06.09 திகதியும், (3) வட மத்திய மாகாண சபையின் பதவிக்காலம் 1998.06.13 திகதியும், (4) மேல் மாகாண சபையின் பதவிக்காலம் 1998.07.17 திகதியும், (5) சப்ரகமுவ மாகாண சபையின் பதவிக் காலம் 1998.06.21 திகதியும், (6) வட மேல் மாகாண சபையின் பதவிக்காலம் 1998.11.11 திகதியும் முடிவடைந்தன.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பின் 154 (உ) உப பிரிவுக்கு இணங்க பதவிக்காலம் முற்றுப்பெற்ற ஊவா, மத்திய, வடமத்திய, மேல், சப்ரகமுவ, வடமேல் ஆகிய மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதற்கு வேட்புமனுக்கள் கோரப்பட்டன. 1988 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின 10ஆம் பிரிவின் கீழ் ஒவ்வொரு மாகாண சபை தொடர்பாகவும் வேட்பு மனு அறிவித்தல் வெளியிடப்பட்டன.

இத் தேர்தலுக்கு மாவட்ட ரீதியில் தெரிவு செய்யப்படவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை (1981 ஆம் ஆண்டு சனத்தொகைக் கணிப்பீட்டின்படி) பின்வருமாறு இருந்தது. கொழும்பு-43, கம்பஹா-36, களுத்துறை-23, கண்டி-28, மாத்தளை-11, நுவரெலியா-17, காலி-22, மாத்தறை-17, அம்பாந்தோட்டை-14, குருநாகல்-35, புத்தளம்-15, அநுராதபுரம்-21, பொலநறுவை-10, பதுளை-19, மொனராகலை-13, இரத்தினபுரி-23, கேகாலை-19 ஆகும்.

## ஐந்து மாகாண சபைகளுக்கான வேட்புமனுக்கள் தாக்கல்

ஊவா, மத்திய, வடமத்திய, மேல், சப்ரகமுவ ஆகிய ஐந்து மாகாண சபைகளுக்காக ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்துக்கும் எனத் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களில் 12 அங்கீரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள், 11 சுயேச்சைக் குழுக்கள் என்பவற்றினால் தாக்கல் செய்யப்பட்ட 84 வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதோடு அவற்றின்படி போட்டியிட முன்வந்த வேட்பாளர்களின் எண்ணிக்கை 2446 ஆகும். இவற்றில் சுயேச்சைக் குழுக்களுக்கான அபேட்சகர்களின் எண்ணிக்கை 255 ஆகும்.

## ஐந்து மாகாண சபைகளுக்கான தேர்தல் திகதியில் மாற்றம்

ஊவா, மத்திய, வடமத்திய,மேல், சப்ரகமுவ ஆகிய ஐந்து மாகாண சபைகளுக்காக வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் 1036/4, 1036/5, 1036/6, 1036/7, 1036/8 ஆகிய இலக்கங்களைக் கொண்ட 1998.07.15 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானிகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்டிருந்த வாக்களிப்புத் தினமான 1998 ஓகஸ்ட் மாதம் 28 ஆம் திகதியை மாற்றும் முகமாக 1998.08.04 ஆம் திகதிய 1039/5 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் ஜனாதிபதி யால் வெளியிடப்பட்ட பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் எல்லா நோக்கங்களுக்காகவும் (முன்னர் வெளியிடப்பட்ட அதிவிஷேட வர்த்தமானிகள்) பயனற்றதாகக் கருதப்படல் வேண்டுமென (செயலிழந்துவிட்டதாக) அறிவிக்கப்பட்டது.

**ஊவா, மத்திய, வடமத்திய, மேல், சப்ரகமுவ ஆகிய ஐந்து மாகாண சபைகளுக்காக வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு 1998 ஓகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி வாக்களிப்பு நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த போதும் தேர்தல் நடைபெறவில்லை**

## ஐந்து மாகாண சபைகளுக்குமான வாக்கெடுப்புக்காக புதிய வாக்கெடுப்புத் தினத்தை நிர்ணயித்தல்

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழான 1998.08.04 ஆம் திகதிய 1039/5 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின் செல்லுபடியான தன்மை தொடர்பாக நீதிமன்றத்தின் முன்னிலையில் பல மனுக்கள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. இது தொடர்பான எஸ்.சீ. 509/98 ஆம் இலக்க அதி உயர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மனு பற்றி கருத்தில் எடுத்த நீதிமன்றம், 5 மாகாண சபைகளுக்கும் தேர்தல்கள் ஆணையாளரினால் வாக்கெடுப்புக்காக விதிக்கப்பட்ட வாக்கெடுப்புத் தினத்தை செல்லுபடியற்றதாக்கும் விதத்தில் வெளியிடப்பட்ட பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழான கட்டளை சட்டரீதியற்றது எனத் தீர்மானித்ததைத் தொடர்ந்து ஊவா, மத்திய, வடமத்திய,மேல், சப்ரகமுவ ஆகிய ஐந்து மாகாண சபைகளுக்குமான வாக்கெடுப்புத் தினமாக 1999.04.01 ஆம் திகதியைப் பிரகடனப்படுத்தி தேர்தல்கள் ஆணையாளரினால் 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 22(6) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் 1999.02.08 ஆம் திகதிய 1065/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

குறித்த மாகாணசபைகளுக்கு 1999.04.01 ஆம் திகதியில் வாக்கெடுப்பு நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டமை தொடர்பாக பல்வேறு சமூகங்களையும் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற அமைப்புகளினால் குறித்த தினத்தில் வாக்கெடுப்பு நடத்தப்படுவதினால் அவர்களுக்கேற்படக்கூடிய சிரமங்கள் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளருக்கு முறையீடு செய்யப்பட்டன. அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களை கவனத்தில் எடுத்த தேர்தல்கள் ஆணையாளர் குறித்த விடயத்தை மனு ஒன்றின் மூலம் இலங்கை அதி உயர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்து நீதிமன்ற அனுமதியைப் பெற்றதன் பின்னர் ஊவா, மத்திய, வட மத்திய, மேல், சப்ரகமுவ ஆகிய ஐந்து மாகாண சபைகளுக்குமான வாக்கெடுப்புத் தினமாக1999 ஏப்ரல் மாதம் 06 ஆம் திகதியை பெயர் குறித்து 1999.03.01 ஆம் திகதிய 1070/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் அறிவித்தல் ஒன்று தேர்தல்கள் ஆணையாளரினால் பிரசுரிக்கப்பட்டது.

**பிற்போடப்பட்ட ஊவா, மத்திய, வடமத்திய, மேல், சப்ரகமுவ ஆகிய ஐந்துமாகாண சபைகளுக்குமான தேர்தல்கள் 1999.04.01 ஆம் திகதி நடைபெறும் என அறிவித்திருந்த போதும் 1999.04.06 ஆம் திகதியே நடைபெற்றன.**

## 1999.01.25 ஆம் திகதி நடத்தப்பட்ட வடமேல் மாகாண சபைக்கான தேர்தல்

1998.11.17 ஆம் திகதிய 1054/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட வடமேல் மாகாண சபைக்கான குறித்த வேட்புமனு அறிவித்தலுக்கு இணங்க அம் மாகாண சபையின் நிர்வாக மாவட்டங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் ஏழும், சுயேச்சைக் குழுக்கள் நான்கும் தாக்கல் செய்த நியமனப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதோடு போட்டியிடுவதற்காக 446 வேட்பாளர்கள் பெயர் குறித்துரைக்கப்பட்டன.

வடமேல் மாகாண சபைக்காக 1998.12.10 ஆம்திகதிய 1057/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தில் 22 ஆம் பிரிவுக்கு அமைவான அறிவித்தலுக்கு இணங்க குறித்த தேர்தல் 1999 ஜனவரி மாதம் 25 ஆம் திகதி நடத்தப்பட்டது.

இத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி (UNP), பொதுசன ஐக்கிய முன்னணி (PA), மக்கள் விடுதலை முன்னணி (JVP) , புதிய இடது சாரி முன்னணி (NLF), முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி, இலங்கை லிபரல்கட்சி, இலங்கை முன்னேற்ற முன்னணி ஆகிய கட்சிகளும் சுயேச்சைகளும் போட்டியிட்டன. வெற்றி பெற்ற கட்சிகளுக்கு கிடைத்த ஆசனங்களின் எண்ணிக்கை அட்டவணை 7A இல்காட்டப்பட்டுள்ளன.

இம் மாகாண சபைக்காக பதிவு செய்யப்பட்ட 1,859,295 வாக்காளர்களுக்காக 1,160 வாக்கெடுப்பு நிலையங்கள் நிறுவப்பட்டன. பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கையில் 77.89 சதவீதத்தினர் வாக்கெடுப்பின்போது வாக்களித்தனர். தேர்தல் நாளில், பொதுஜன முன்னணியின் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை வேட்பாளர்கள் ஆகியோர் எதிர்க்கட்சி வேட்பாளர்கள், அவர்களின் வாக்கெடுப்பு சாவடி முகவர்கள் மற்றும் வாக்காளர்களை விரட்டியடிக்க கும பல்களை அணிதிரட்டுவதையும் வழி நடத்து தையும் காணமுடிந்தது. சுயாதீன வாக்கெடுப்பு கண்காணிப்பு அமைப்புகளின்படி, இலங்கையின் சோசலிச சமத்துவக் கட்சியின் உள்ளூர் பிரதிநிதிகள் - மற்றும் சில அரசாங்க அதிகாரிகள் கூட - பொதுஜன முன்னணியின் ஆதரவாளர்கள், துப்பாக்கிகள், கத்திகள் மற்றும் இரும்புக் கம்பிகள் ஆகியவற்றுடன் வாக்குச்சாவடிகளை சுற்றிவளைத்தல், எதிர்க்கட்சி பிரதிநிதிகள் மற்றும் ஆதரவாளர்களை விரட்டியடித்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டதாக கூறப்பட்டது.

(தொடரும்...)

## 214 பலி...

விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 8,371 ஆக அதிகரித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 94 பெண்களும் 120 ஆண்களும் உள்ளடங்குவதாக அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## 4,591 பேருக்கு...

ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரும் புதுவருட கோவிட் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

அதன்படி, இந்நாட்டு மொத்த கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 416, 961 ஆக அதிகரித்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றில் இருந்து இதுவரை பூரணமாகக் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 353, 191 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## சீனியின் விலை...

களுக்கு தேவையான சீனி மாத்திரமே கைவசம் உள்ளதாகவும் எதிர்வரும் நாட்களில் சீனி இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்படாவிட்டால் சீனிக்கு பற்றாக்குறை ஏற்படும் எனவும் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் கடந்த ஒருவார காலப் பகுதிக்குள் சீனியின் விலை 100 ரூபாயுக்கும் அதிக தொகையால் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கோவிட் வைரஸ்...

தெரிவித்துள்ளார்.

டெல்டா வைரஸ் மிக வேகமாக பரவுவதால் அனைவரும் தடுப்பூசி செலுத்திக் கொள்ளுமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் உள்ள அனைத்து தடுப்பூசிகளும் டெல்டாவிற்கு எதிராக போராடுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதனால் அனைவரும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## புதுக்குடியிருப்...

யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த 86 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் 29 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அவருக்கு மீள் பரிசோதனை மேற்கொள்ளப்படும் என்று மருத்துவ அறிக்கையின் ஊடாக தெரியவருகிறது. (ம-3)

## 2ஆம் கட்ட...

பூசியை குறிப்பிட்ட வயதினருக்கு ஏற்றும் நடவடிக்கைகள் சுகாதார வைத்திய அதிகாரிபணிமனையினூடாக முன்னெடுக்கப்படவுள்ளது.

மேலும் யாழில் இதுவரை முதல் கட்டமாக தடுப்பூசி பெறாதவர்களும் இதன் போது தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி எங்கே? எப்போது? வழங்கப்படும் என்பதனை குறிப்பிட்ட பிரதேச செயலகம் ஊடாக கிராம சேவகர் அறிவிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## சுன்னாகத்தில்...

வெள்ளிக்கிழமை காலை வயற் காணிக் கிணற்றிற்குள் சடலமாகக் கண்டறியப்பட்டுள்ளார்.

தற்போது தனிமைப்படுத்தல் ஊடரங்குச் சட்டம் அமுலினுள்ள நிலையில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி பகுதிவயற் காணியில் வெங்காய அறுவடை இடம்பெற்ற நிலையில் நேற்று முன் தினமிரவு குடும்பத்தின் வாழ்வாதாரத்திற்காக குறித்த குடும்பஸ்தர் வெங்காயக் காவலுக்குச் சென்றிருந்தார்.

நேற்றுக் காலைவேளையிலும் மேற்படி குடும்பஸ்தர் வீடு திரும்பாத நிலையில் அவரது பிள்ளைகள் வயற் காணிக்குச் சென்று அவரைத் தேடியுள்ளனர். அங்கு அவரைக் காணாத நிலையில் வீடு திரும்பியுள்ளனர்.

இந்நிலையில் நேற்று அதிகாலை முதல் மேற்படி வயற்காணியின் ஒரு பகுதியில் செய்கைபிப்படும் குரக்கன் பயிருக்கு நீர் பாய்ச்சலில் ஈடுபட்டிருந்த அதே வயற் காணி உரிமையாளர் நேற்றுக் காலை 9 மணிக்குப் பின்னர் குறித்த குடும்பஸ்தர் கிணற்றில் உயிரிழந்த நிலையில் சடலமாக மிதப்பதனைக் கண்டுள்ளார்.

மேற்படி சம்பவத்தில் சுன்னாகம் மேற்குப் பருத்திக்கட்டிப் பகுதியைச் சேர்ந்த துரைராஜா நந்தபாலன் (வயது-44) என்பவரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,18)

## வவுனியாவில்...

னர் தெரிவித்துள்ளனர்.

நேற்று மாலை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, கற்குளம் பகுதியில் வசிக்கும் 50 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவர் திடீரென மயக்கமடைந்து கீழே விழுந்துள்ளார்.

இதனையடுத்து அயலவர்களின் உதவியுடன் அவசர நோயாளர் காவு வண்டி மூலம் குறித்த நபர் வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

எனினும், வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு வருவதற்கு முன்னரே அவர் மரணமடைந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து குறித்த நபருக்கு கோவிட் தொற்று உள்ளதா? என பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. பரிசோதனை முடிவுகளையடுத்து அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ம-3,250)

## அத்தியாவசிய...

திகதிவரை தொடர்ந்து முன்னெடுக்க முடியும் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அனுமதி வழங்கப்பட்டுள்ள தொழிற்துறைக்கு செல்வோர், வீதித் தடைகள் இடப்பட்டுள்ள இடங்களில் தங்களின் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தல் கட்டாயமானது என இராணுவத் தளபதி கூறினார்.

அத்தியாவசிய சேவைகள், விவசாயம், ஏற்றுமதித்துறை, ஆடைக் கைத்தொழில் உள்ளிட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ள தொழிலுக்கு மாத்திரமே தனிமைப்படுத்தல் ஊரடங்கு காலப்பகுதியில் பயணிக்க முடியும் என அவர் குறிப்பிட்டார்.

அத்தியாவசிய ஊழியர்களை மாத்திரம் சேவைக்கு அமர்த்துமாறு நிறுவனத் தலைவர்களிடம் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா கோரிக்கை விடுத்தார். (ம-3)

## வைத்திய நிபுணர்...

நேற்று உயிரிழந்துள்ளார்.

இவர் தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் யாழ்.கிளையில் மருத்துவச் சான்றிதழை வழங்கும் மருத்துவர்களில் ஒருவராகக் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## வடக்கு மாகாண...

போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த மூவர் கோவிட்-19 நோயினால் நேற்று உயிரிழந்துள்ளனர்.

மானிப்பாயைச் சேர்ந்த 53 வயதுடைய பெண் ஒருவரும் உரும்பிராயைச் சேர்ந்த 56 வயதுடைய ஆண் ஒருவரும் உயிரிழந்தனர்.

மற்றும் நல்லூரைச் சேர்ந்த மருத்துவர் ஒருவரும் கொரோனாவால் மரணமானார்.

மேலும் சாவகச்சேரியில் மயங்கி விழுந்து உயிரிழந்த மூதாட்டி ஒருவருக்கும் கொரோனா உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் உயிரிழந்த இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

மன்னார் சாந்திபுரம் பகுதியைச் சேர்ந்த 68 வயதுடைய பெண் ஒருவர் வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையின்போது குறித்த பெண்ணுக்கு கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

மேலும் குருநாகல் பகுதியைச் சேர்ந்த 82 வயதுடைய வயோதிபர் ஒருவர் கொரோனாத்தொற்றுக் காரணமாக கடந்த மூன்று வாரங்களாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரிபிரிவில் வசித்துவந்த முதியவர் ஒருவர் உயிரிழந்த நிலையில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சிமாவட்ட வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவின் ஊடாக பிசிஆர் பரிசோதனைக்காக அனுப்பப்பட்ட 98 வயதுடையவருக்கே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் வவுனியாவில் பூங்கா வீதியைச் சேர்ந்த 83 வயதுடைய ஆண் ஒருவரும் நெளுக்குளம் பகுதியைச் சேர்ந்த 86 வயதுடைய பெண் ஒருவரும் கொரோனாவால் மரணமடைந்துள்ளனர். (ம-3,18,33,250,285)

## 222 பேருக்கு...

துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று இரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கோவிட் தொற்றுப் பரவல் அடைந்துள்ள நிலையில் 222 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,250)

## பொது முடக்கத்...

டுள்ள நாடுகள் வரிசையில் இலங்கையும் இணைந்துள்ளதாக வைத்திய நிபுணர்களின் சங்கம் அறிவித்துள்ளது.

சுகாதார ஊழியர்களும் கோவிட்-19 தொற்றுக்குள்ளாதல், ஒக்சிஜன் உதவியுடன் இருக்கும் நோயாளர்கள் உள்ளிட்ட மொத்த நோயாளர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு என்பன இதற்கு காரணமாக அமைந்துள்ளதாக வைத்திய நிபுணர்கள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக, ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளை பாராட்டுவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், தொற்று உச்ச நிலையை அடைந்திருந்தபோது, அமுல்படுத்தப்பட்ட முடக்கத்தின்போது சட்டங்கள் எதிர்பார்த்த அளவில் நடைமுறைப்படுத்தப்படாமை கவலையளிப்பதாகவும் வைத்திய நிபுணர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (ம-3)

## பொது முடக்கம்...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று முற்பகல், ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கோவிட் ஒழிப்பு தொடர்பான விசேட கூட்டத்தின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன்போது, தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதோடு, இதுவரையில் தடுப்பூசிஏற்றப்படாத 30 வயதுக்கு மேற்பட்ட நபர்கள் மற்றும் பிரதேசங்கள் காணப்படுமாயின், அவர்களுக்குத் தேவையான தடுப்பூசிகளைக் கேட்டுப் பெற்றுக்கொள்ள, சுகாதார மருத்துவ அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்துமாறு, ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

பிறிதொரு காரணத்தால் தடுப்பூசியின் முதலாம் டோஸைப் பெற்றுக்கொள்ள முடியாத நபர்கள் காணப்படுவார்களாயின், இரண்டாவது டோஸ் தடுப்பூசிஏற்றப்படும் நிலையங்களில் வைத்தே அவ்வாறானவர்களுக்கும் முதலாவது டோஸ் தடுப்பூசியை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் இதன்போது எடுத்துரைக்கப்பட்டது.

தடுப்பூசி ஏற்றிக்கொள்வது தொடர்பில் பொதுமக்களை ஊக்கப்படுத்தும் வேலைத்திட்டங்களை, பிரதேச ரீதியில் அரசியல்வாதிகள் முன்னெடுக்க வேண்டுமென்று, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இதன்போது எடுத்துரைத்தார்.

இந்த வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் இதுவரை பரிந்துரைகளை முன்வைத்த வைத்தியர்கள் மற்றும் சுகாதாரத்துறை முக்கியஸ்தர்கள் ஆகியோர் எதிர்வரும் காலங்களில் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் அவதானம் செலுத்த வேண்டுமென்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

# கொரோனா பயணக் கட்டுப்பாடு; பிரிட்டனின் சிவப்பு பட்டியலில் இலங்கை

(பிரிட்டன்)

பிரிட்டனின் புதுப்பிக்கப்பட்ட கொரோனாப் பயணக் கட்டுப்பாடுகள் வெளியிடப்பட்டுள்ள நிலையில், இலங்கை தொடர்ந்தும் சிவப்புப் பட்டியலில் உள்ளது.

இலங்கையில் கொரோனாப் பரவல் தீவிரமடைந்த காரணத்தால் பிரிட்டனின் சிவப்புப் பட்டியலில் இலங்கை தொடர்கின்றது.

இதேவேளை, செப்டெம்பர் மாதமளவில் பிரிட்டனின் சிவப்புப் பட்டியலில் இருந்து இலங்கை வெளியேறலாம் என்று பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

பிரிட்டனின் புதுப்பிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகளில் கனடா, டென்மார்க், பின்லாந்து, போர்துகல், சுவிட்சர்லாந்து, லிச்சென்ஸ்டீன் மற்றும் ஸ்லோவேனியா ஆகிய நாடுகள் பச்சைப் பட்டியலுக்கு முன்னேறியுள்ளன.

தாய்லாந்து மற்றும் மொன்டினீக்ரோ ஆகிய நாடுகள் புதிதாக சிவப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. பிரிட்டனின் புதுப்பிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் அமுலுக்கு வருகின்றது. (ம-03)

# சங்குப்பிட்டி கடற்பகுதியில் உருக்குலைந்த நிலையில் சடலம் மீட்பு

(பூநகரி)

பூநகரி சங்குப்பிட்டி கடற்பகுதியில் உருக்குலைந்த சடலம் ஒன்று மிதந்த நிலையில் கண்டறியப்பட்டுள்ளது.

இது குறித்த தகவல் வழங்கப்பட்டதையடுத்து பூநகரி, சாவகச்சேரி பொலிஸார் மற்றும் கடற்படையினர் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டுள்ளனர்.

மீன்பிடி வலைகளால் சுற்றிய நிலையில் காணப்படும் குறித்த சடலத்தை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-03,30)

# ஒரு கிலோ சீனியின் விலை ரூ. 300 - 400 வரை உயரும்

## பாராளுமன்ற உறுப்பினர் துஷாரா

(கொழும்பு)

சந்தையில் ஒரு கிலோ சீனி 300 முதல் 400 ரூபாய்க்கு விற்கப்பட்டால் பொது மக்கள் ஆச்சரியப்பட வேண்டாம் என்று எதிர்க்கட்சிதெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது பேசிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் துஷாரா இந்துனில் அமரசேன இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய ஆட்சி இறக்குமதி வரியை 25 ரூபாயினால் குறைத்த பின்னர் அரசுடன் தொடர்புடைய வணிகர்கள் ஏற்கனவே போதுமான அளவு சீனியை இறக்குமதி செய்துள்ளனர். தற்போது வணிகர்களில் பெரும்புள்ளிகள் அரசைக் கட்டுப்படுத்துவதால் சீனி மட்டுமல்லாமல் பல பொருட்களின் விலைகள் கடுமையாக அதிகரித்துள்ளன என்று அவர் சுட்டிக்காட்டினார்.

"கொரோனா வைரஸ் நெருக்கடியைக் கையாள அரசு ஒரு புதிய திட்டத்தை உருவாக்க வேண்டும். இந்த முயற்சிக்கு எதிர்க்கட்சிகளும் அரசுக்கு முழு ஆதரவை அளிக்கும். குடிமக்கள் தங்கள் உயிர்களைப் பாதுகாக்க மட்டுமே அரசைக் கேட்கிறார்கள். குடிமக்களின் உயிர்களைப் பாதுகாப்பது அரசின் கடமை. தற்போதைய நிர்வாகம் தோல்வி அடைந்துவிட்டது. ஆனால் நாட்டை தோல்வியடைய அனுமதிக்க முடியாது. அரசு தனது தோல்வியுற்ற கொள்கைகளை ஒதுக்கி வைத்துவிட்டு வல்லுநர்களின் உள்ளீடுகளுடன் ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டும்" என்றும் பாராளுமன்ற உறுப்பினர் துஷாரா இந்துனில் அமரசேனா தெரிவித்தார். (ம-03)

# சாவகச்சேரி வைத்தியசாலையில் மயங்கி விழுந்து மரணமான பெண்ணுக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தென்மராட்சி சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வசித்துவந்த பெண் ஒருவர் உயிரிழந்த நிலையில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரியைச் சேர்ந்த 74 வயதுப் பெண் ஒருவர் திடீர் காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்குச் சென்று அங்கு மருத்துவரைச் சந்திப்பதற்காக காத்திருந்திருந்தார்.

திடீரென அவர் மயங்கி வீழ்ந்த நிலையில் அவரை அணுகிப் பார்த்தபோது அவர் உயிரிழந்த நிலையில் காணப்பட்டார்.

அதன் பின்னரேயே அவருடைய பிசிஆர் மாதிரிகள் பெறப்பட்டு நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில் அவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

மிதந்த ஆபத்தானதாக கொரோனாத் தொற்று தீவிரம் பெற்றுள்ள நிலையில் மக்கள் மிதந்த அவதானத்துடன் செயற்படுவதால் உங்களையும் உங்கள் சார்ந்திருக்கும் சமூகத்தவர்களையும் பாதுகாக்க முடியும் என்கின்றனர் சுகாதாரத் தரப்பினர். (ம-03,30)

# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் பொலிஸ்மா அதிபரின் அறிவிப்பு கண்காட்சியாகக்கூட இருக்கலாம்

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விசாரணை தொடர்பில் பொலிஸ்மா அதிபர் விடுத்துள்ள அறிவிப்பானது ஊடகத்துக்கான கண்காட்சியாகக்கூட இருக்கலாம் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சாடியுள்ளது.

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் தொடர்புடைய 311 பேர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். ஒரு இலட்சம் தொலைபேசி உரையாடல்கள் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

36 கோடியே 50 இலட்சம் ரூபாய் பணம் மற்றும் சொத்துக்கள் இதுவரைபறிமுதல் செய்யப்பட்டுள்ளன" என்று பொலிஸ்மா அதிபர் சிடி. விக்கிரமரத்ன தெரிவித்திருந்தார். இந்தத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் குறித்து பொலிஸ்மா அதிபர் விசேட காணொளி அறிவிப்பிலேயே மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் ஊடகங்களிடம் கூறியதாவது,

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும். தாக்குதலின் பின்புலம் மற்றும் பிரதான சூத்திரதாரிகள் கண்டறியப்பட வேண்டும் என்று பாராளுமன்றத்துக்குள்ளும் வெளியிலும் பிரதான எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் நாம் குரல் எழுப்பினோம்.

பேராயர் உள்ளிட்ட தரப்பினரும் இதனை வலியுறுத்தினர்.

தாக்குதல் நடைபெற்று ஒன்றரை வருடங்களுக்குப் பின்னரே பொலிஸ்மா அதிபர் ஒருவர் வெளியில் வந்து அது தொடர்பில் கருத்து வெளியிடுகின்றார். கறுப்புக்கொடிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு கடும் எதிர்ப்புகள் வெளிக்கிளம்பியுள்ள பின்புலத்திலேயே குறித்த அறிவிப்பும் பொலிஸ்மா அதிபரால் வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, இது கண்காட்சியாகக்கூட இருக்கலாம். ஜனாதிபதி ஆணைக்குழு அமைக்கப்பட்டு மூன்று மாதங்களுக்குள் குற்றவாளிகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதியின் சௌபாக்கிய வேலைத்திட்டத்தில் உறுதி வழங்கப்பட்டிருந்தது. அதன்பிரகாரம் அரசு செயற்படாதது ஏன்? என்றும் அவர் கேள்விஎழுப்பினார். (ம-03)


கண்ணீர் அஞ்சலி



சிரேஷ்ட சட்டத்தரணி

உயர்திரு. சின்னத்துரை சிவநேசன்

( போசகர் - அமுதசுரபி கலாமன்றம், புத்தூர் )

தொண்ணூறுகளில் யாழ்ப்பாணப் பட்டிதொட்டியெங்கும் அமுதசுரபி கலாமன்றம் பட்டிமண்டபங்களையும் விவாத அரங்குகளையும் நிகழ்த்திய காலத்தில் அவ்வரங்குகளில் நடுவராய், நீதிபதியாய் விளங்கி எமக்கு நல்வழிகாட்டியாய்த் திகழ்ந்து சகமனிதராய் தற்பெருமைகள் அற்று அறிவினிலோங்கிய மதிப்புக்குரிய சிவநேசன் ஐயாவின் மறைவு அறிந்து பெருந்துயருற்றோம் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அகில இலங்கை அமுதசுரபி கலாமன்றம் - புத்தூர்

(C-2249)



G.C.E O/L Paper Class for English Language or English Literature through online

- சிறந்த பெறுபேற்றிற்கான உத்தரவாதம்
- மகிழ்ச்சியான கற்றல் அனுபவம்
- தனித்தனியான கவனமெடுப்பும் அதை ரீதியான பரிகார வழிகாட்டி 1 ஹூர்
- மாதிரிப் பரீட்சையும் வழிகாட்டல் கலந்துரையாடலும்
- முற்பணக் கட்டணம் ரூபாய் 1,000.00
- மாதாந்தம் 10 வகுப்புகள்

A+

நீண்ட கால அனுபவமிக்க தகுதிவாய்ந்த ஆங்கில விரிவுரையாளரால் நெறிப்படுத்தப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் September மாதம்முதல் வகுப்புகள் ஆரம்பமாகின்றது. பதிவுகளுக்கு தங்கள் பெயர். பாடத் தெரிவு (English Language/Literature) மற்றும் வட்சப் இலக்கத்தினை 077 788 0330 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு SMS செய்யவும்.

(C-2383)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.